விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 236 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 27 சனிக்கிழமை (12.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இராவண மன்னன் சிங்கள இயக்கர்
### சரத் வீரசேகர புதுக்கதை



(கொழும்பு)

இராவண மன்னன் இயக்கர் குலத்தை சேர்ந்த சிங்களவர். இராணவன் தமிழர் என்று குறிப்பிட்டுக்கொண்டு இனவாதத்தை தூண்டிவிட முயற்சிக் கிறார்கள். 15

வறட்சியினால்
## எலிக் காய்ச்சல் பரவும் அபாயம்
பொதுமக்களுக்கு எச்சரிக்கை

7 பக்கம் பார்க்க

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தெல்லிப் பழை யூனியன் கல் லூரி முன்பாக நேற்று 15

## மின்னல் தாக்கி மூவர் பலி

(கொழும்பு)

மிஹிந்தலை தம்மன்னாவ வாவியில் மின்னல் தாக்கி மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீன்பிடிக்கச்சென்ற மூன்று மீனவர்களே 15

# வட மாகாணத்தை வாட்டும் வறட்சி

## யாழ்., கிளிநொச்சி, மக்கள் அதிகம் பாதிப்பு
## குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவும் மோசமான கடும் வறட்சி காரணமாக வட மாகாணம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக யாழ்., கிளிநொச்சி மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதோடு குடிநீருக்கும் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## வாள்களுடன் அட்டகாசம்
### வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் வாள்களு டன் அட்டகாசம் புரிந்த இரு வர் கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸார் நேற்று தெரி வித்துள்ளனர்.

இச்சம்பவம்தொடர் 15

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக
## யாழ்ப்பாண இளைஞனிடம் ரூ.25 இலட்சம் மோசடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இளைஞர் ஒரு வரை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து வலிகாமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் சுமார் 25 இலட்சம் ரூபாயை மோசடி செய்துள்ள தாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர் பில் தெரியவருவதாவது,

இத் தாவியில் வசிக்கும் நபரொரு 15

ஆறுகால்மடத்தில் குழந்தையின் தலை மீட்பு
## யாழ்.மாநகர ஆணையாளர் உட்பட 3 அதிகாரிகளுக்கு நீதிமன்றம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஆறுகால் மடம் பகுதியில் சிதைவடைந்த நிலையில் குழந்தையின் தலை மீட்கப்பட்ட சம்பவம் தொடர் பிலான விசாரணைகளுக்காக யாழ்.நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 16ஆம் திகதி முன் னிலையாகுமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட மூவருக்கு கட்டளை வழங்கப் பட்டுள்ளது.

ஆறுகால்மடம், கோம்பயன் மணல் மயானத்திற்கு அரு கில் உள்ள காணி ஒன் றினுள் இருந்து நேற்று முன் தினம் வியாழக்கிழமை சிதை வடைந்த நிலையில் 16

## இலங்கையை பிளவுபடுத்தும் 13ஐ அமுலாக்கக்கூடாது
### மகாநாயக்க தேரர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் நடை முறைப்படுத்தப்படக் கூடா தென மகாநாயக்க தேரர்கள் தெரிவித் 16

யாழ்.மாட்டீன் வீதி கொலை வழக்கு
## மரண தண்டனைக் கைதி நீதிமன்றத்தால் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாட்டீன் வீதி கொலை வழக்கில் எதிரிக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனை மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டு எதிரிவிடு விக்கப்பட்டுள்ளார். 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர்.
மிகப் பொருத்தமான ஜாதகங்களை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

264. ஆடியபாதம் வீதி.
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

021 222 9306,071 999 9306
077 138 7596

(C-7051)



குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
பெருமையுடன் வழங்கும் சாதாரண மனிதனை முழுமனிதனாக்கும்
மனவளக்கலையின் ஆரம்ப திறனூக்கப்பயிற்சிகள்

* உடல் நலத்திற்கு ⇒எளியமுறை உடற்பயிற்சிகள்
* உயிர் வளத்திற்கு ⇒சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
* மன அமைதிக்கு ⇒தியானப்பயிற்சிகள்
* அறிவு வல்லமைக்கு ⇒அகத்தாய்வு பயிற்சிகள்
* உறவுகள் மேம்பட ⇒தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :12.08.2023 சனிக்கிழமை தொடக்கம் 18.08.2023 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

அறிமுகவுரை :- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி மு.சுபாஷினி அவர்கள் (தமிழ்நாடு இந்தியா )

பயிற்சிகளை வழங்குபவர்கள் :; துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணம் (அறிவுத்திருக்கோவில்)
இல 81 பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல :- 0212222772,0768571395,0771235646,0714403268,0777368745

(C-7054)







## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 04 . 1933



மறைவு 07 . 08 . 2023

### தேவப்பிரகாசம் வடிவாம்பாள்

ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் 56/27, கியூ வீதி கொம்பனித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட தேவப்பிரகாசம் வடிவாம்பாள் அவர்கள் 07.08.2023 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அன்னதானம் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தேவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் ஜெயரூபன்(டென்மார்க்), ஆனந்தராஜா(லண்டன்), உதயகுமார்(டென்மார்க்), ஜெயரஞ்சினி(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்றவர்களான மனோன்மணி, யோகமணி, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் ஸ்ரீராம்(கொழும்பு), புஸ்பராணி (டென்மார்க்), சுதாஜினி (லண்டன்), தமயந்தி(டென்மார்க்) ஆகியோரின் மாமியாரும் மனோஜ், அருசனா, அமிர்தன், றவோய், அரவிந்தன், அபிராமி, சந்தோஷ், சுருதி மீரா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான செபரட்ணம், அருள்பிரகாசம், ஜெயபிரகாசம் மற்றும் தவப்பிரகாசம், இன்பரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை அஞ்சலிக்காக பி.ப 3மணி - 7மணி வரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் (13.08.2023) மகிந்த மலர்ச்சாலை(கல்கிசை) என்னும் இடத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 526 1463
075 762 3148

(16685)

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 - 07 - 1944



இறப்பு 08 - 08 - 2023

### கந்தசாமி அன்னம்மா

அல்வாய் கிழக்கு தாமன்தோட்டத்தை பிறப்பிடமாகவும் கப்பூது மற்றும் அச்சுவேலி தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ் சென்றவர்களான ஆறுமுகம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - லக்ஷிமி தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தசாமியின் (தோரை) அன்பு மனைவியும் சிறிதரன் (சிறி - ஜேர்மனி), ராஜேஸ்வரி (ரதி - சுவிஸ்), மங்களேஸ்வரி (றஞ்சி - ஜேர்மனி), சாரதா (பிரான்ஸ்), சிவகுமார் (சிவா - பெல்ஷியம்), வளர்மதி (சோபா - சுவிஸ்) மற்றும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி (கிளி), சிவானந்தம் (சிவா), சிவநேசன் (அப்பன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தரூபி, மோகன், குமார், விக்டர், ஜெயா, காலஞ்சென்ற பற்குணநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் லவன், கிரன், ஆதுசியா, ஸ்ருதி, பிரியங்கா, சிவநேசன், சாருஜா, ஸ்ருதி, அஞ்சலி, சயனன், நித்திஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2023) ஞாயிற்றுக் கிழமை 7 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தோப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(16683)

தகவல் -
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலை கேணியையும் தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமிக்க முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது

## அகில இலங்கை இந்துமா மன்றம்

(யாழ்ப்பாணம்)

**வரலாற்றுச் சிறப்புமிக்கதும் சைவ மக்களின் முக்கிய மான சமய சம்பிரதாயங்களோடு தொடர்புடையதுமான கீரிமலை கேணியையும் தொல்லியல் திணைக்களம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது என அகில இலங்கை இந்துமா மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஒவ்வொரு சைவ ஆதாரங்களையும் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்த நினைப்பதும், அதற்கான கண்டனங்கள் வெளிநாடுகள் வரை சென்று எதிரொலிக்கும்போது தமது செயற்பாடுகளிலிருந்து திணைக்களம் தற்காலிகமாக பின்வாங்குவதும் என்று சைவ மக்கள் தமது அடையாளங்களை ஒன்றன் பின் ஒன்றாக இழந்துவரும் துர்ப்பாக்கிய நிலைக்கு இட்டுச் செல்வது மிகவும் கவலைக்குரியது.

இவ்வாறான செயற்பாடுகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும். இப்படியான சமிக்ஞைகளால் அரசாங்கம் சைவத் தமிழ் மக்களின் நம்பிக்கையை பெறுவதற்கான அதன் முயற்சிகளில் பாரியளவில் பாதிப்பு ஏற்படும்.

கீரிமலை கேணி தமது நீத்த உறவினர்களின் பிதிர்க் கடன்களை நிறைவேற்ற வெளிநாடுகளிலிருந்தும் சைவ மக்கள் வந்து செல்கின்ற இடம்.

ஈழத்தில் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரத்தின் அருகில் அமைந்துள்ள இந்த கேணி பல நூற்றாண்டு கால பழமை வாய்ந்தது. இது ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக வலி.வடக்கு பிரதேச சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகிற இடம்.

சைவத் தமிழ் மன்னன் இராவணனோடும் இராமாயணத்தோடும் தொடர்புடைய திருக்கோணேஸ்வர ஆலய சுற்றாடலில் வெளியார் ஆக்கிரமிப்பு, கன்னியா வெந்நீரூற்று தொடர்பில் தொல்லியல் திணைக்களத்தின் தலையீடு, அண்மையில் பறளாய் முருகன் கோவிலில் உள்ள ஒரு அரச மரத்தைப் பற்றிய சர்ச்சை, வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டமை, பின் அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட சர்ச்சைகள் என சைவ மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்கின்றன.

எனவே, இத்தகைய அநீதியான செயலைத் தடுத்து நிறுத்துவதோடு, சிறுபான்மை மக்களின் மத வழிபாடுகளை தடுக்கின்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-104)

## வேலு பரியின் 'மௌனத்தீவு' நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

நூல் ஆசிரியர் வேலு பரியின் மௌனத்தீவு நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை 12 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்.பல்கலை வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணமும் விரிவுரையாளர் வை.ஈழலிங்கமும் வெளியீட்டுரையை H.N.B வங்கி பிராந்திய முகாமையாளர் ம.தயாகரனும் நயப்புரையை யாழ்.பல்கலை ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலாநிதி. ம.திருவரங்கனும் நிகழ்த்தவுள்ளனர்.(4-5)



புத்தூர் ஸ்ரீ குமரகுருபரன் சனசமூக நிலையத்தின் விளையாட்டரங்க திறப்பு விழா கடந்த புதன் கிழமை (09.08.2023) மலை குமரகுருபரன் மைதானத்தில் வெகு சிறப்புற நடைபெற்றது.

## நாயுடன் மோதி விபத்து இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞன் நாயுடன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் நவாலி வழுக்கையாறு வெளியால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்த வேளை நாயொன்று திடீரென குறுக்கே பாய்ந்தது. இதனால் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த இளைஞன் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார். (4-5-104)



கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளையின் வருடாந்த அருணலு பரிசளிப்பு வைபவம் முகாமையாளர் திருமதி. தபோதினி கஜரூபன் தலைமையில் வங்கிக் கிளையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பிரதம அதிதியாக வடமராட்சி கல்வி வலய பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. ஜனனி லதர்ஷன் கலந்து சிறப்பித்தார். (படம்-மகாலிங்கம்)

## 13 தொடர்பில் தமிழர்களுக்கு தலையும் சிங்களவர்களிற்கு வாலையும் காட்டும் ரணில்

### ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அரசியல் அமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஜனாதிபதியாக அவர் கொண்டிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்க முடியும்.

ஆனால், மிகவும் நாசூக்காக பாராளுமன்றத்துக்கு அதனைக் கொண்டு சென்றிருப்பதோடு 13 தொடர்பாக தமிழர் தரப்புக்குச் சாதகம் போலக் காட்டும் சில பரிந்துரைகளையும் முன்வைத்திருக்கிறார். ஆனால், இப்பரிந்துரைகள் எதையும் சிங்களவர்கள் மிகப் பெரும்பான்மையாக உள்ள பாராளுமன்றில் நிறைவேற்ற முடியாது என்று தெரிந்திருந்தும் பாராளுமன்றத்துக்குக் கொண்டு சென்றிருப்பது தமிழர்களுக்குத் தலையையும் சிங்களவர்களுக்கு வாலையும் காட்டுகின்ற அவரின் விலாங்குத் தந்திரமே ஆகும் என தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாணசபைச் சட்டங்களில் உடனடியாகச் சில மாற்றங்களைச் செய்து விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்தவுள்ளார் என்ற தோற்றத்தைத் தனது பாராளுமன்ற உரையின் போது வெளிப்படுத்தியிருக்கிறார்.

மாகாண சபைச் சட்டம் நடைமுறைக்கு வருவதோ, மாகாண சபைத் தேர்தல் நடைபெறப் போவதோ உடனடிச் சாத்தியம் இல்லாதவை. உள்ளூராட்சித் தேர்தலையே நடத்த விடாமல் வேட்புமனுத் தாக்கல் செய்த பின்பும் பல தந்திரங்களைச் செய்து தேர்தலைக் காலவரையின்றி ஒத்திப்போட்ட ரணில் விக்கிரமசிங்க மாகாண சபைத் தேர்தலை நடத்துவார் என்று எதிர்பார்ப்பது அரசியல் அறிவிலித்தனம்.

மாகாண சபைச் சட்டங்களில் திருத்தங்கள் செய்து தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்வார் என்று நினைப்பது அதைவிட அறிவிலித்தனமானது.


ரணில் விக்கிரமசிங்க மாகாண சபை விவகாரத்தைக் கையிலெடுத்திருப்பதன் முதலாவது நோக்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரும் இந்தியாவின் அழுத்தங்களில் இருந்து விடுபடுவதாகும். இரண்டாவது நோக்கம் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்தி அறுதிப் பெரும்பான்மையுடன் தான் ஜனாதிபதியாக நீடிப்பதை உறுதி செய்வதாகும்.

ரணில் தீர்வு தருவார் என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்களிடையே ஏற்படுத்தி அவர்களின் வாக்குகளைக் கபளீகரிப்பதும் மாகாண சபை விவகாரத்தைப் பாராளுமன்றத்துக்குக் கொண்டு சென்று அதனை நிறைவேற்ற முடியாமல் செய்வதன் மூலம் சிங்கள மக்களினது வாக்குகளை வாரிச் சுருட்டுவதுமே அவரது இலக்குகளாகும்.

தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த விலங்குத்தனத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 153 பந்தில் 244 ரன்கள் பிரித்வி ஷா அதிரடி



இந்திய அணியின் இளம் கிரிக்கெட் வீரர் பிரித்வி ஷா தொடக்க வீரரான இவர் இங்கிலாந்தில் நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 153 பந்தில் 244 ரன்கள் குவித்து சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்து ஒருநாள் கிரிக்கெட் கோப்பைக்கான தொடரில் நார்தாம்ப்டன்ஷைர் அணிக்காக விளையாடினார். சோமர்செட் அணிக்கெதிராக இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். இவரது அதிரடியால் நார்தாம்ப்டன்ஷைர் 8 விக்கெட் இழப்பிற்கு 415 ரன்கள் குவித்தது.

அவரது ஸ்கோரில் 28 பவுண்டரிகள், 11 சிக்சர்கள் அடங்கும். 23 வயதான பிரித்வி ஷா 81 பந்தில் சதம் அடித்தார். 129 பந்தில் இரட்டை சதம் அடித்தார்.

ஏற்கனவே, விஜய் ஹசாரே தொடரில் புதுச்சேரிக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 227 ரன்கள் அடித்துள்ளார்.

இது அவரின் 2 ஆவது இரட்டை சதமாகும். (4)

# பளுதூக்குதல் போட்டியில் நெளுக்குளம் பாடசாலை மாணவர்கள் சாதனை



வடமாகாண ரீதியிலான 2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் வவுனியா நெளுக்குளம் பாடசாலை மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

ஆண், பெண் இருபாலருக்குமான பளுதூக்கும் போட்டியில் நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவர்கள் 17 வயது ஆண்கள் பிரிவில் ஜெ. ஜதுர்சன் 61kgஎடை பிரிவில் 112kg தூக்கி தங்க பதக்கமும் கி. சுபிஸ்கரன் 73kg எடை பிரிவில் 126kg தூக்கி வெள்ளி பதக்கமும் 20வயது ஆண்கள் பிரிவில் அ. கோகுலன் 67kg எடை பிரிவில் 140kg தூக்கி தங்கமும் 17 வயது பெண்கள் பிரிவில் ச.பிரியங்கா 81kg எடை பிரிவில் 66kg தூக்கி வெண்கல பதக்கமும் யோ. சாருஜன். கா.பிரியதர்சன். அ.பிரகீஷ், க.கலா முறையே 4ஆம் 5ஆம் இடங்களையும் பெற்றுப் பாடசாலைக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

ச.யெனோஜன் பயிற்றுவிப்பாளரின் மூலம் இவ்வெற்றி கிடைத்திருந்தமை குறிப்பிடதக்கது. (4-299)



வடமாகாண பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரில் வரலாற்றுச் சாதனை படைத்த மன்னார் மாவட்டம் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை வீரர்களை கௌரவித்து வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை பாடசாலையில் இடம்பெற்றது. (படம்: ஜோசப்நயன்)

# ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை முதலிடத்தில் பாபர் அசாம்



ஒருநாள் மற்றும் இருபது-20 கிரிக்கெட் போட்டி வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை ஐ.சி.சி நேற்று முன்தினம் வெளியிட்டது.

ஒருநாள் பட்ஸ்மேன்கள் தரவரிசையில் பாகிஸ்தான் கப்டன் பாபர் அசாம் (886 புள்ளி) முதலிடத்திலும் தென் ஆபிரிக்காவின் வான்டெர் டசன் 2 ஆவது இடத்திலும் (777 புள்ளி), பாகிஸ்தானின் பகர் ஜமான் 3 ஆவது இடத்திலும் (755 புள்ளி), இமாம் உல்-ஹக் 4 ஆவது இடத்திலும் (745 புள்ளி) உள்ளனர்.

வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் 85 ரன்கள் சேர்த்த இந்தியாவின் சுப்மன் கில் இரு இடம் முன்னேறி 5 ஆவது இடத்தை (743 புள்ளி) பிடித்துள்ளார். அவரது சிறந்த தரநிலை இதுவாகும். விராட் கோலி 9 ஆவது இடத்தில் நீடிக்கிறார்.

பந்து வீச்சாளர் தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் ஹேசில்வுட் முதலிடத்தில் நீடிக்கிறார். இந்தியா சார்பில் சிராஜ் 4 ஆவது இடத்தில் உள்ளார். சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் 14 இல் இருந்து 10 ஆவது இடத்திற்கு ஏற்றம் கண்டுள்ளார்.

இதேபோல், இருபது-20 கிரிக்கெட் தரவரிசையில் பட்டிங்கில் சூர்யகுமார் யாதவ் 907 புள்ளிகளுடன் நம்பர் ஒன் இடத்தில் கம்பீரமாக பயணிக்கிறார். பாகிஸ்தானின் முகமது ரிஸ்வான் (811 புள்ளி) 2 ஆவது இடத்தில் இருக்கிறார். பந்து வீச்சாளர் தரவரிசையில் ஆப்கானிஸ்தானின் ரஷித் கான் முதலிடத்தில் தொடருகிறார். (4)

# ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் ஒருநாள் தொடர் இலங்கையில்

PCB Pakistan Cricket Board | Sri Lanka Cricket | Afghanistan Cricket Board

ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் இலங்கையில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

தமது சொந்த நாட்டில் நடைபெறவேண்டிய இத்தொடரை இலங்கையில் முன்னின்று நடத்துவதற்கு ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவிப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்தது.

லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டி நிறைவடைந்ததும் ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கிரிக்கெட் தொடர் ஹம்பாந்தோட்டையிலும் கொழும்பிலும் நடைபெறவுள்ளது.

இத்தொடரில் விளையாடவுள்ள ஆப்கானிஸ்தான் அணியினர் இலங்கை வந்தடைந்துள்ளனர்.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதல் இரண்டு சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் ஹம்பாந்தோட்டையில் ஓகஸ்ட் 22, 24 ஆம் திகதிகளிலும் 3 ஆவதும் கடைசியுமான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி கொழும்பில் ஒகஸ்ட் 24ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இத் தொடர் இலங்கையில் நடத்தப்படுவது தொடர்பாக கருத்து வெளியிட்ட இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஏஷ்லி டி சில்வா, இந்தத் தொடரை நடத்துவதற்கு இலங்கையை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை தேர்ந்தெடுத்தது குறித்து நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். கிரிக்கெட் உலகில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வென்றெடுத்துள்ள நம்பிக்கையை இது எடுத்துக்காட்டுகிறது. மேலும் இத்தகைய போட்டிகளை நடத்துவதற்கு பொருத்தமான நாடு இலங்கை என்பது இதன் மூலம் வெளிப்படுகிறது. இந்த தொடரை நடத்துவதற்கு உரிய பாதுகாப்பு சூழலை ஏற்படுத்திக் கொடுப்போம் என உறுதியளிக்கிறோம் என குறிப்பிட்டார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹென்றீசியன் சங்கமம்-2023 பழைய மாணவர் ஒன்றுகூடலும் கௌரவிப்பும்

## அதிபரின் ஆசிச் செய்தி

யா/இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 116 ஆவது ஆண்டு நிறைவில் எம் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்விற்கும் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்விற்கும் ஆசி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் தொடர்ந்தும் பல்வேறு துறைகளில் சாதனையாளர்களாக விளங்கு வதால் கல்லூரித்தாய் பெருமகிழ்வு அடைகின்றாள். கல்லூரிக் காலத்திற்கு பின்பு வருடாந்தம் கல்லூரி தினத்திற்கு அடுத்து வருகின்ற ஒரு குறிப்பிட்ட தினத்தில் பழைய மாணவர்களாக ஒன்றுகூடி உங்கள் அனுபவங் களைப் பகிரவும் சாதனையாளர்களாகிய கல்லூரியின் மாணவர்களையும் பழைய மாணவர் களையும் கௌரவிப்பதும் பழைய மாணவர் சங்கத்தின் மிகச் சிறப்பான செயற்பாடாகும். சாதனையாளர்களை கௌரவிக்கும் முகமாக அவர்கள் இன்னும் பல சாதனைகளை புரிவதற்கும் புதிதாக இன்னும் பலர் சாதனையாளர்களாக வர உந்து சக்தியாக அமை கின்றது. அந்த வகையில் இன்றைய தினத்திலே கல்வியிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் சாதனையாளர்களாக கௌரவிக்கப்படுகின்றவர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் கூறி நிற்கின்றேன்.

எமது கல்லூரி இன்னும் பல சாதனையாளர்களை யும் சமூக அக்கறையுள்ள சிறந்த மனிதர்களை உருவாக்குவதிலும் அனைத்து சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டு 125 ஆவது ஆண்டு நோக்கி பயணிக்கின்ற இக்காலத்திலே பழைய மாணவர்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் உடல் நலத்துடனும் வளரவும் ஆசித்து இறையாசி கூறுகின்றேன்.

**அருட்தந்தை ஆ.மைக் மயூரன்,**
**அதிபர், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி,**
**இளவாலை.**



**இடம்: கல்லூரி மைதானம்**
**காலம்: 2023.08.12(சனிக்கிழமை)**
**மாலை 3 மணி**

**பிரதமவிருந்தினர்** - Prince Cowdry
(Executive Committee Member, Canada OBA)

**சிறப்பு விருந்தினர்** - Kaneshanathan Srivisagan
( Senior Software Engineer Bloomberg LP London)

## என்றும் வளர்மதி போல வளர்கவே!

யா/புனித ஹென்யரசர் கல்லூரியின் நூற்றுப் பதினாறாவது அகவையின் நிறைவிலே கல்லூரித் தாயின் புதல்வர்களில் நானும் ஒருவன் என்ற வகையிலும் பழைய மாணவர் இளவாலை தாய்ச்சங்கத்தின் தலைவர் என்ற வகையிலும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். எம் மண்ணின் மணம் கமழும் புனித ஹெறியரசன் கல்லூரி சாதனைகள் பல நிகழ்த்தி கல்விப் புலத்திலும் இணைப்பாடவிதான துறையிலும் தனக்கென்று தனியான ஓர் இடத்தை தக்க வைத்துள்ளது. இப்பெருமைக்குப் பின்னே "கடின உழைப்பு எதனையும் வெல்லும்" என்ற மகுட வாசகத்திற்கு உயிர் கொடுத்து உழைக்கின்ற கல்லூரியின் முதல்வர் தந்தை உள்ளிட்ட அனைத்து கல்விசார், கல்விசாரா பணியாளர்கள், மாணவத் தலைவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் நவில்வதில் மனநிறைவடைகின்றேன். இன்னும் பல்லாண்டுகள் எம் கல்லூரி பல சாதனை படைக்கும் நல் மாணாக்கர் களையும் சமுதாயச் சிற்பிகளையும் நற்பிரஜைகளையும் உருவாக்க வேண்டுமென்று இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**தலைவர் OBA இளவாலை**



ஜேம்ஸ் அன்றனி
பொஸ்கோ
டனுஜன்
**Junior national 1st place**
**and srilankan record.**
**school national meet**
**2nd place**



**Football National Un 18 Champion**



**PT Competition National 3rd place**

## 2021 A/L பல்கலைக்கழகத்துக்கு தெரிவானோர்



கணிதப் பிரிவு
கிஷாந்தனன்



பெனடிக்ற் வோல்ரன் றோய்
உயிரியல்



அற்புதராஜன் நிசாகர்
விஞ்ஞானப் பிரிவு



பீற்றர்ஜஸ்ரின் பயஸ் ஜெனோஷன்
விஞ்ஞானப் பிரிவு



அலைக்சாண்டர் போஸ்வின்
உயிரியல்




கிருபாகரன் நிதுர்சன்
வணிகப் பிரிவு



யஸ்ரின்றோய் அகைஸ்
வணிகப் பிரிவு



றெஜிஸ்ராசரட்ணம் சுவீன்
வணிகப் பிரிவு



பாவிலுப்பிள்ளை றியோப்
கலைப் பிரிவு



சிவராசா சானுஜன்
கலைப்பிரிவு



றெஜிஸ் கருணாகரன் சர்ணா
கலைப்பிரிவு



லெனாட் புஸ்பகுமார்
ஜோன் அல்றிக் - கலைப்பிரிவு



மதிவாணன் றெஜினோல்ட்
கலைப்பிரிவு



விமலேந்திரன் விதுசன்
கலைப்பிரிவு

(C-7053)


**லிலி பான்சி அன் லில்லிரெக்ஸ்**
அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், ஐஸ்கிறீம் வகைகள் மற்றும் ஆடை வகைகள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
**அன்னமாள் கோயில் முன்பாக கல்லூரி வீதி, இளவாலை.**

QUENCY BOOK SHOP
(Quency Distributors)
No.19, Pinto palace, Colombo -06.
011 236 6107.
No.271. K.K.S Road, Jaffna.
021 221 7513
077 226 8486
077 755 0031
quencybook@gmail.Com
Quency Distributors
www.quencybooks.com




**OLYMPIA SPORTS**
Dealers all kinds of sports goods
Band Items, Musical instruments&Jersey
021 222 3490 / 077 806 0267
077 675 1646 / 077 533 5004
olympiasportsjaffna@gmail.com
NO.273, K.K.S Road, Jaffna.

NORTHERN SPORTS COLLEGE
MARUTHANARMADAM
சிறுவர்களுக்கான பயிற்சிகள்
4 வயதிலிருந்து
Table Tennis, Badminton Chess, Tennis Football
கைதடி வீதி, மருதனார்மடம்.
077 806 0267 - 021 205 9631.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழீழத்தை பெற்றுக் கொடுக்க இடமளிக்கக் கூடாது

## இராணுவ அதிகாரி ஜகத் வலியுறுத்து

**(கொழும்பு)**

**13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஊடாக முழுமையான அதிகாரங்களை வழங்க முயற்சிப்பது மறைமுகமாக ஈழத்தை வழங்குவதாக இருக்கும் என ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான லெப்டினட் ஜெனரல் ஜகத் டயஸ் தெரிவித்துள்ளார்.**

இலங்கை இரண்டாக பிளவுபடுத்துவதற்கு எதிரான அமைப்பு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக கொழும்பு தும்முல்லை சம்புத்த ஜயந்த விகாரையில் நேற்று முன்தினம். நடத்திய கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது நாட்டுக்காக உயிர்களை தியாகம் செய்த படையினரை மாத்திரமல்லாது, மக்களை காட்டிக்கொடுக்கும் செயல்.

தற்போது இராணுவ முகாம்கள் அப்புறப்படுத்தப்பட்டு, இராணுவத்தினரை குறைத்து, வரலாற்று சிறப்புமிக்க தொல்லியல் உரிமைகள் அழிக்கப்படுகின்றன.

பெற்றுக் கொள்ள முடியாது போன தமிழீழத்தை 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொடுக்க இடமளிக்க முடியாது எனவும் ஜகத் டயஸ் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

### மசகு எண்ணெய்யின் விலை மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை நேற்றும் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதன்படி, டபிள்யூ. ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 82.90 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன், பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.42 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. அதேநேரம் இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலையும் அதிகரிப்பை பதிவு செய்து 2.78 அமெரிக்க டொலராக உள்ளது. (நி-5)

## இறக்குமதித் தடை முழுமையாக நீக்கப்படும் - செஹான்

(கொழும்பு)

இலங்கையில் நடைமுறையில் இருக்கின்ற இறக்குமதி தடையானது முழுமையாக நீக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க அறிவித்துள்ளார்.

சென்னையில் அண்மையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் வைத்து உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அதன்படி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் அனைத்து பொருட்களுக்குமான இறக்குமதி தடை நீக்கப்படும் என தெரிவித்துள்ளார். எனினும் வாகன இறக்குமதி மீதான தடை நீக்கப்படுமா என்பது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும் வெளியாகவில்லை.

இது வரையில் வெளியான தகவல்களின் படி தற்போதைய சூழ்நிலையில் வாகன இறக்குமதிக்கான தடையை நீக்குவது என்பது மிகவும் அவதானத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய விடயம் என்றே பல தரப்பினரும் கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கச்சதீவை இலங்கைக்கு இந்திராகாந்தி அரசாங்கமே வழங்கியது

### பிரதமர் மோடி சாடல்



(டில்லி)

இந்தியா மற்றும் இலங்கை இடையே அமைந்துள்ள கச்சதீவு, பாரம்பரியமாக இலங்கை மற்றும் இந்திய கடற்றொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1974 ஆம் ஆண்டு கச்சதீவை இலங்கைக்கு இந்திரா காந்தி அரசாங்கமே வழங்கியது. இந்தியப் பிரிவினைக்கு காங்கிரஸ் தான் காரணம் என பிரதமர் நரேந்திர மோடி குற்றஞ்சாட்டியுள்ளார்.

கச்சதீவை இந்தியாவுக்குக் கொண்டு வர வலியுறுத்தி, தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தொடர்ந்து கடிதம் எழுதி வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

1974 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி "இந்தோ - இலங்கை கடல்சார் ஒப்பந்தத்தின்" கீழ் கச்சதீவை இலங்கையின் பிரதேசமாக ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சபாநாயகரின் தீர்மானம் ஜனநாயகத்துக்கு பலத்த அடி

## எதிர்க்கட்சி



(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பின் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு எதிராக நீதிமன்றம் செல்வதை தடுப்பதற்கான நடவடிக்கையாகவே சர்வதேச நாணய நிதியத்தின் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பாராளுமன்றம் அனுமதித்த விடயத்தை நீதிமன்றில் சவாலுக்குட்படுத்த முடியாது என சபாநாயகரின் தீர்மானம் அமைந்துள்ளது என எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வர தேவையில்லை.

அவ்வாறு பாராளுமன்றத்துக்கு கொண்டுவர வேண்டும் என எந்த தேவையும் இல்லை. ஆனால் அரசாங்கம் இதனை பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்து, அதற்கு வாக்கெடுப்பு நடத்தி, இறுதியாக, இது தொடர்பாக யாருக்கும் நீதிமன்றம் செல்ல முடியாது என சபாநாயகரின் கட்டளை ஒன்றையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

அரசாங்கத்துக்கு ஏதாவது பிரேரணை ஒன்றை கொண்டுவர தேவையெனில், அதனை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து, அனுமதியை பெற்றுக் கொண்டு, யாராவது அதற்கு எதிராக நீதிமன்றம் செல்ல முற்படும்போது, அதனை தடுப்பதற்கு சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை எழுப்பி, சபாநாயகரிடம் கட்டளை ஒன்றை பெற்றுக் கொள்வார்கள்.

இதுதான் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் தொடர்பில் இடம்பெற்றது. இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்துக்கு சென்றிருக்கின்றன.

ஆனால் ஒருதடவை கூட இது தொடர்பான ஒப்பந்தங்களை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்ததில்லை. அதனால் அரசாங்கம் மக்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமையை தடுப்பதற்கு செய்த பாரிய துரோகமாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முடியும் என்றால் அரசியலமைப்பில் அதற்குரிய உறுப்புரை என்ன? முடியுமானால் காட்டுங்கள்.

நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பாகவே பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். அதனால் அரசாங்கம் திட்டமிட்டே இதனை செய்தது. அதனால் சபாநாயகரின் இந்த தீர்மானம் பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு பாரிய அடியாகும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## சம்பளம் அதிகரிக்கப்படாவிட்டால் தொழிற்சங்கப் போராட்டம்

### அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையாளர் சங்கம்

(கொழும்பு)

தற்போதைய வாழ்க்கை செலவிற்கு ஏற்ப சகல அரச சேவையாளர்களினதும் வேதனம் உயர்த்தப்பட வேண்டும் என அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையாளர் சங்கம் கோரியுள்ளது.

அந்த சங்கத்தின் செயலாளர் சந்தன சூரியாராச்சி இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதன்படி, தற்போதைய வேதன அதிகரிப்பானது 20,000 ரூபாவால் உயர்த்தப்பட வேண்டும் எனவும் வேதன அதிகரிப்பு வழங்கப்படாவிடின் தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்க நேரிடும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-5)

### 748 மில்லியன் ரூபா பெறுமதியான

## வெளிநாட்டு சிகரெட்டுகளை அழிக்க சுங்க வருமான அதிகாரிகள் நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் துபாயிலிருந்து இலங்கைக்கு கொள்கலனில் கொண்டு வரப்பட்ட 748 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை அழிப்பதற்கு சுங்க வருமான கண்காணிப்பு திணைக்கள அதிகாரிகள் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் கொள்கலன் இவ்வருட ஜூன் மாதத்தில் கைப்பற்றப்பட்டது.

அதனுள்ள சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 947,000 வெளிநாட்டு சிகரெட்டுகள் சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

கொழும்பு துறைமுக சுங்கத்திலிருந்து இந்த சிகரெட் கையிருப்புக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தால், இலங்கைக்கு 695 மில்லியன் ரூபா சுங்க வருமானம் இழப்பு ஏற்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வேகமாக பரவி வரும் எலிக்காய்ச்சல்

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

**தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக நீர்மட்டம் குறைவாக இருக்கும் ஏரிகளுக்கு மீன்பிடிப்பதற்கும் குளிப்பதற்கும் மக்கள் வருவதால் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.**

குருநாகல் கனேவத்த மகுல்வெவ கிராமத்தைச் சேர்ந்த இருவர் எலிக்காய்ச்சல் காரணமாக கடந்த 9 ஆம் திகதி உயிரிழந்துள்ளனர். 38 மற்றும் 39 வயதுடைய குறித்த நபர்கள் அப்பகுதியில் உள்ள கிரிந்திவெல்மட குளத்தில் நீராடிய போது தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இதேபோல் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 12 பேர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறைந்த நீர் உள்ள ஏரிகளில் இருந்து நீர் அருந்துவதை தடுக்குமாறும் நீச்சல், மீன்பிடித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் எனவும் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (நி-5)

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி தனியார் சுத்திகரிப்பு சேவை பெற்றுக் கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல்-2023

1. கரைச்சி பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விரிக்கப்பட்ட இடங்களுக்கு சுத்திகரிப்பு சேவையினை **(Cleaning Service)** பெற்றுக் கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 2023.08.14 - 2023.08.28 பி.ப 02.00 மணிவரை**
   **கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி - 2023.08.28 பி.ப 02.00 மணிவரை**
   **கேள்வி திறக்கும் திகதி - 2023.08.28 பி.ப 02.15 மணி**
2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்க வேண்டும்.
4. தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி **மு.ப 9.00** மணி தொடக்கம் **பி.ப 14.00** மணி வரை மீளளிக்க முடியாத கேள்வி படிவக் கட்டணமாக ரூபா **1,000.00** இனையும் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 10,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் மூலப்படிவத்தில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு "தலைவர், பெறுகைக்குழு, கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெற வேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
6. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
7. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக கரைச்சி பிரதேசசபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
9. மேலதிக விபரங்கள் அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | சுத்திகரிப்பு சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|
| 01 | தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி | 02 | 10.09.2023 தொடக்கம் 09.09.2024 |
| 02 | பசுமைப்பூங்கா, டிப்போ சந்தி, கிளிநொச்சி | 02 | |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி**

(C-7052)

## சைக்கிளோட்ட பயிற்சியில் ஈடுபட்டிருந்த மாணவன் பேருந்து மோதி உயிரிழப்பு

(கொழும்பு)

சைக்கிளோட்டப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பாடசாலை மாணவர் ஒருவர் பேருந்து மோதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - குருணாகல் வீதியின் வால்பிட்ட பகுதியில் குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மினுவாங்கொட ஹீனஹிட்டியான பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சைக்கிளோட்டப் போட்டியில் பங்குபற்றும் நோக்குடன் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது எதிரே வந்த பேருந்து மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தின் போது பலத்த காயமடைந்த பாடசாலை மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-5)


## இராசிபலன்

**12.08.2023**
**ஆடி 27, சனிக்கிழமை**
**ஏகாதசி முற்பகல் 9.28 மணிவரை**
**மிருகசீரிடம் முற்பகல் 9.36 மணிவரை**

**சுபநேரம் -3.04-4.34 மணிவரை**
**இராகுகாலம்-9.04-10.34 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

**சந்திராஷ்டமம்- அனுசம்.**


**வளவன்**




உறவினர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், பகையொன்று நட்பாகலாம்.



தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.



ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பயணங்களால் நன்மையுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.



பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.



பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.



தொழிலில் வருமானத்தை அதிகரிக்க திட்டம் தீட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.



பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.



பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.



உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயமாகலாம்.



புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், குடும்பத்துடன் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.



நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, எட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், கௌரவமான நாள்.



உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**செழிப்பில் எச்சரிக்கை, வறுமையில் பொறுமை.**

## முகநூல் தரிசனம் 178

# அடுத்தவரை மகிழ வைத்து நீங்களும் மகிழுங்கள்

அழகான பணக்காரி ஆடம்பரத்தில் வாழும் ஒரு பெண். ஒரு கவுன்சிலிங் செய்பவரை காணச்சென்றாள். அவரிடம் என் வாழ்க்கையே ஒரு சூனியமாக இருக்கு.

எவ்வளவோ செல்வம் இருந்தும் வெறுமையாக உணர்கிறேன். அர்த்தமே இல்லாமல் இலக்கே இல்லாமல் "வாழ்க்கை இழுக்கிறது."

என்னிடம் எல்லாமே இருக்கிறது. இல்லாதது நிம்மதியும் மகிழ்ச்சியும் மட்டுமே. என் சந்தோசத்திற்கு வழி சொல்லுங்கள் என்றாள்.

கவுன்சிலிங் செய்பவர் அவரின் அலுவலகத்தை சுத்தம் செய்யும் ஒரு பணிப் பெண்ணை அழைத்தார். அவர் அந்த பணக்கார பெண்ணிடம் நான் இப்பொழுது என் வேலைக்காரப் பெண்ணிடம் எப்படி மகிழ்ச்சியை வரவழைப்பது என்று சொல்லச் சொல்கிறேன்.

நீங்கள் குறுக்கே எதுவும் பேசாமல் கேளுங்கள் என்றார். பணிப் பெண்ணும் துடைப்பத்தை கீழே போட்டு விட்டு ஒரு நாற்காலியில் அமர்ந்து சொல்ல தொடங்கினாள்.

என் கணவர் மலேரியா காய்ச்சலால் இறந்தார். அடுத்த மூன்றாவது மாதம் என் மகன் ஒரு விபத்தில் இறந்து போனான். எனக்கு யாரும் இல்லை. எதுவும் இல்லை.

என்னால் உறங்க இயலவில்லை. சாப்பிடக்கூட முடியவில்லை. யாரிடமும் மனது விட்டு பேச சிரிக்கவும் முடியவில்லை. என் வாழ்க்கையை முடித்துக்கொள்ளலாம் என நினைத்தேன்.

ஒரு நாள் நான் வேலை முடிந்து வரும் பொழுது ஒரு பூனை என்னை பின் தொடர்ந்து வந்தது. வெளியே சில்லென்று மழை பெய்து கொண்டு இருந்தது. எனக்கு பூனையை பார்க்க பாவமாக இருந்தது.

அந்தப் பூனையை நான் என் வீட்டில் உள்ளே வர செய்தேன். மழையால் மிகவும் குளிராக இருந்ததால் நான் அதற்கு குடிக்க கொஞ்சம் பால் கொடுத்தேன். அது அத்தனை பாலையும் குடித்து விட்டு என் கால்களை அழகாக வருடிக் கொடுத்தது.

கடந்து போன 3 மாதத்திற்கு பிறகு நான் முதல் முதலாக புன்னகைத்தேன். நான் அப்பொழுது என்னையே கேள்வி கேட்டேன். ஒரு சிறு பூனைக்கு நான் செய்த ஒரு விடயம் என்னை சந்தோசப்படுத்துகிறது என்றால் ஏன் இதை பலருக்கும் செய்து நான் என் மனநிலையை மாற்றிக்கொள்ளக்கூடாது என யோசித்தேன்.

அடுத்த நாள் நோய்வாய்ப்பட்டிருந்த என் பக்கத்து வீட்டு பாட்டிக்கு உண்பதற்கு சூடான கஞ்சி செய்து கொடுத்தேன். அந்த பாட்டி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

பாட்டியை மகிழவைத்து நான் மகிழ்ந்தேன். இப்படி ஒவ்வொரு நாளும் நான் பலருக்கு சிறுசிறு உதவி செய்து அவர்கள் மகிழ நானும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று என்னை விட நிம்மதியாக உறங்கவும் உணவை ரசித்து உண்ணவும் யாரேனும் இருக்கிறார்களா என்பதே சந்தேகம். மகிழ்ச்சி என்பது அதை மற்றவர்க்கு கொடுப்பதில் தான் இருக்கிறது என்பதை கண்டு கொண்டேன்.

இதை கேட்ட அந்த பணக்கார பெண் விசும்பி விசும்பி அழுதாள். அவளால் பணம் கொண்டு வாங்கக்கூடிய எல்லாம் இருந்தது. ஆனால் பணத்தால் வாங்க முடியாத ஒரு விடயம் மகிழ்ச்சி.

அது அவளிடம் இல்லை. வாழ்க்கையின் அழகு என்பது நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்பதில் இல்லை. உங்களால் அடுத்தவர் எவ்வளவு மகிழ்ச்சி ஆகிறார்கள் என்பதிலேயே இருக்கிறது.

மகிழ வைத்து மகிழுங்கள்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# வலியால் அவதிப்பட்ட பெண்ணின் வயிற்றிலிருந்து 15 கிலோ கட்டியை அகற்றிய மருத்துவர்கள்



(டில்லி)

வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்த பெண்ணின் வயிற்றில் இருந்து 15 கிலோ கட்டியை மருத்துவர்கள் வெற்றிகரமாக அகற்றியுள்ளனர்.

இந்த சம்பவம் இந் தூரில் நடந்துள்ளது.

மத்தியபிரதேச மாநிலம் இந்தூரில் உள்ள இன்டெக்ஸ் மருத்துவமனைக்கு அஷ்தா என்ற 49 வயது பெண் வயிற்று வலிக்காக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு பரிசோதனைகள் மேற்கொண்ட மருத்துவர்கள் அப்பெண்ணின் அடிவயிற்றில் மிகப் பெரிய கட்டி வளர்ந்திருப்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்தனர்.

இதையடுத்து 10 இற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் உதவியாளர்கள் 2 மணி நேரம் மேற்கொண்ட அறுவை சிகிச்சையில் 15 கிலோ எடையுள்ள கட்டியை வெற்றிகரமாக அகற்றியுள்ளனர். (நி-5)

# சிரியாவில் பேருந்து மீது துப்பாக்கிச் சூடு இராணுவ வீரர்கள் 23 பேர் பலி

(டமகஸ்கார்)

சிரியா நாட்டு வீரர்களை ஏற்றிக்கொண்டு ஒரு பேருந்து சிரியாவின் கிழக்கு பகுதியில் சென்று கொண்டிருந்தது. அப்பேருந்து சிரியா-ஈராக் எல்லைக்கருகே உள்ள டெய்ர் எல்-ஜவுர் பிராந்தியத்திலுள்ள கிழக்கு சிரியாவின் மயதீன் நகருக்கு அருகே சென்று கொண்டிருந்தது.

அப்போது இப்பேருந்தை வழிமறித்து திடீரென சூழ்ந்து கொண்ட துப்பாக்கி ஏந்திய கும்பல் அதன் மீது தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் 23 வீரர்கள் உயிரிழந்ததாகவும் 10 பேர் காயமடைந்ததாகவும் சிரியாவில் இயங்கி வரும் பிரிட்டன் நாட்டை சேர்ந்த மனித உரிமைகளுக்கான அமைப்பு தெரிவிக்கிறது.

சிரியாவிலும் ஈராக்கிலும் நிலவி வந்த ஒரு ஸ்திரமற்ற அரசியலினால் 2011 லிருந்து ஐ.எஸ்.அமைப்பு ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. சிரியாவில் இந்த அமைப்பினருக்கெதிராக அமெரிக்கா களமிறங்கியதை தொடர்ந்து 2018 இல் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆட்சியில் இந்த அமைப்பு பெருமளவு அழிக்கப்பட்டது. 2019 இல் அந்த அமைப்பின் தலைவர் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து இதன் ஆதிக்கம் சிரியாவில் முழுவதுமாக முடிவுக்கு வந்தது. ஆனாலும் சிறிய அளவில் அதன் ஆதரவாளர்கள் ஆங்காங்கே மறைந்து வாழ்ந்து அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் எதிராக தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஏர் இந்தியாவின் லோகோ மாற்றம்




(டில்லி)

இந்திய அரசின் நிறுவனமாக இருந்த விமான போக்குவரத்து நிறுவனமான ஏர் இந்தியாவை இந்தியாவின் பிரபல தொழில் நிறுவனமான டாடா குழுமம் விலைக்கு வாங்கியது. இக்குழுமத்தின் டலாஸ் பிரைவேட் லிமிடெட் என்ற துணை நிறுவனம் இதனை தற்போது நிர்வகிக்கிறது.

நிறுவனத்தின் மேம்பாட்டின் ஒரு பகுதியாக விமானங்களின் வெளிப்புற தோற்றத்திலும் பெயரிலும் ஏர் இந்தியாவிற்கான லோகோவிலும் பல மாற்றங்களை செய்து புதுப்பொலிவுடன் அனைத்து விமானங்களையும் சேவைக்கு பயன்படுத்த இருக்கிறது.

இதன்படி. இனி "தி விஸ்டா" என அழைக்கப்படும் இந்த லோகோ ஒரு தங்கத்திலான ஜன்னல் ஃப்ரேம் போல தோற்றமளிக்கிறது. "இந்த புதிய மாற்றங்கள் டிசெம்பர் மாதம் ஏர்பஸ் ஏ350 விமானத்தை முதல்முதலாக மக்களின் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தும்போது தெரிய வரும். (நி-5)

# தென்கொரியாவை புரட்டிப்போட்ட புயல் 350 விமானங்கள், 410 ரயில்கள் ரத்து

(சியோல்)

தென்கொரியாவை புரட்டி போட்டுள்ள கனுன் புயலால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் விமான சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனுன் புயல் கரையை கடந்து இருக்கும் நிலையில், தென்கொரியாவில் சங்வோன் உள்ளிட்ட நகரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. கன மழையால் அனைத்து இடங்களும் வெள்ளக் காடாக காட்சி அளிக்கின்றன.

தண்ணீரில் சிக்கிய பொதுமக்கள் 10,000 இற்கும் மேற்பட்டோர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். அதே போல் மீட்புப் படை வீரர்கள் தொடர்ந்து மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மழை மற்றும் வெள்ளப் பாதிப்பு காரணமாக 350 விமானங்கள் மற்றும் 410 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. கடலோர பகுதிகளில் மணிக்கு 6.சென்டிமீற்றர் மழை பெய்ததை கடும் வெள்ளப்பெருக்கிற்கு காரணம் என்று தென் கொரிய உட்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் ஹவாய் தீவில் காட்டுத்தீ! 53 பேர் உயிரிழப்பு, 1700 வீடுகள் தீக்கிரை!



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஹவாய் தீவில் கடந்த சில நாட்களாகப் பரவிவரும் காட்டுத் தீயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 53 ஆக உயர்வடைந்துள்ளது.

லஹைனா நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை காட்டுத்தீ பற்றி எரியத் தொடங்கியது. இதனால் மவுயி தீவில் உள்ள 35,000 இற்கும் மேற்பட்ட மக்கள், வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆபத்தில் உள்ளதாக ஹவாய் அவசர நிலை மேலாண்மை நிறுவனம் தெரிவித்திருந்தது.

அத்துடன் சுமார் 1,700 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன எனவும் 1000 இற்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் இக்காட்டுத் தீயினால் வரலாற்று நகரமான லஹைனா 80 % அழிந்துவிட்டதாகவும் ஹவாய் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஹவாய் காட்டுத் தீ பெரும் இயற்கைப் பேரழிவு என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார். (நி-5)

# துருக்கியில் நிலநடுக்கம் 23 பேர் படுகாயம்




(அங்காரா)

துருக்கி நாட்டின் தென் பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.3 ஆக பதிவாகியுள்ள நிலையில் 23 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதேவேளை கடந்த பெப்ரவரி மாதம் துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ரஷ்யாவின் லூனா-25 விண்கலம் விண்ணில் நேற்று ஏவப்பட்டது



(மொஸ்கோ)

சந்திராயன்-3 போன்று நிலவின் தென்துருவத்தை ஆராய ரஷ்யா லூனா-25 என்ற விண்கலத்தை உருவாக்கியது.

இந்த விண்கலம் ராக்கெட் மூலம் நேற்று விண்ணில் ஏவப்பட்டது. இந்த விண்கலம் 5 நாட்கள் பயணம் செய்து நிலவின் சுற்று வட்டப் பாதையை அடையும் என்றும் பின்னர் 5 முதல் 7 நாட்கள் சுற்றுவட்டப் பாதையில் பயணம் செய்து நிலவில் தரையிறங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சந்திரா யன்-3 விண்கலம் நிலவில் தரையிறங்கும் அதே நாளில் ரஷ்யாவின் லூனா-25 விண்கலம் தரையிறங்கு கிறது. இதற்காக மூன்று இடங்களை ரஷ்ய விஞ்ஞானிகள் தேர்வு செய்துள்ளனர். ரஷ்யா கடந்த 1976 ஆம் ஆண்டு முதன்முதலாக நிலவுக்கு விண்கலத்தை அனுப்பியது.

அதன்பின் 47 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது விண்கலத்தை அனுப்ப உள்ளது.

நிலவில் மாதிரிகளை சேகரித்து நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறதா? என்று லூனா-25 ஆய்வு செய்யும் என்றும் 2021 ஆம் ஆண்டே விண்கலத்தை ஏவ திட்டமிட்டு, பல்வேறு காரணங்களால் தாமதம் ஏற்பட்டதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (நி-5)

# நடுக்கடலில் கவிழ்ந்த படகு 41 பேர் உயிரிழப்பு

## துனீசியாவில் சோகம்

(தூனிஸ்)

துனீசியா அருகே அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 41 பேர் உயிரிழந்தனர்.

வடமேற்கு ஆபிரிக்க நாடான துனீசியாவிலிருந்து அகதிகளை ஏற்றிக் கொண்டு இத்தாலியை நோக்கி படகு ஒன்று சென்று கொண்டிருந்தது. அது சிசிலி நீரிணைப் பகுதியில் சென்று கொண்டு இருந்த போது எதிர்பாராத விதமாக நீருக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அதிலிருந்து அனைவரும் நீருக்குள் விழுந்து தத்தளித்தனர். அப்போது அந்த வழியாக வந்த மால்ட்டா நாட்டு ரிமானோ சரக்குக் கப்பலில் இருந்தவர்கள். நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த அகதிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

2 ஆண்கள், ஒரு பெண், ஒரு சிறுவன் ஆகிய நான்கு பேரை உயிருடன் மீட்டார்கள். அவர்களை முகாமுக்கு இத்தாலிய கடலோரக் காவல் படையினர் கொண்டு சென்றனர். அங்கு அவர்களிடம் நடத்திய விசாரணையில், கடலில் கவிழ்ந்த படகில் மேலும் 41 பேர் இருந்ததாகவும் அவர்கள் அனைவரும் நீரில் மூழ்கி உயிரிழந்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 3 சிறுவர்களும் இருந்தார்கள் என்று மீட்கப்பட்டவர்கள் கூறினர்.

அண்மைக் காலமாக துனீசியாவிலிருந்து இத்தாலியை நோக்கிச் சென்ற ஏராளமான அகதிகளின் படகுகள் விபத்துக்குள்ளானதாக கூறப்படுகிறது.

2023 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் மட்டும் அந்த வழித் தடத்தில் சுமார் 800 அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. (நி-5)

# அவுஸ்திரேலியாவிலும் வேகமெடுக்கும் புதிய வைரஸ் தொற்று

(கன்பெரா)

பிரித்தானியாவில் கண்டறியப்பட்ட "Eris-EG5" கொரோனா வைரஸின் புதிய திரிபு அவுஸ்திரேலியாவிலும் வேகமாக பரவி வருகின்றது.

இந்நிலையில், இதுவரையில், அவுஸ்திரேலியாவில் 100 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

"Eris-EG.5" என்பது கொவிட் 19 ஒமிக்ரோன் வைரஸின் துணை வகை என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

புதிய திரிபு முந்தைய திரிபுகளைவிட அதிக வீரியம் மிக்கதா என்பது தொடர்பில் இதுவரையில் கண்டறியப்படவில்லை. ஆனாலும் இந்த புதிய திரிபு வேகமாக பரவும் அபாயமிக்கது.

கொவிட் தொற்றுக்கான தடுப்பூசி பெறுவதில் அவுஸ்திரேலியர்கள் மத்தியில் பின்னடைவு காணப்படுவதனால் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கொவிட் தொற்று குறித்து மக்கள், ஊடகங்கள், அரசியல்வாதிகள் மறந்து விட்டன. ஆனால் வைரஸ் இன்னும் உள்ளது என்பதை மறந்து விடக் கூடாது.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது நல்லது. என அவுஸ்திரேலிய பேராசிரியர் ஜெர்மி நிக்கல்சன் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நிலவுக்கு அழைத்து செல்லவிருக்கும் நாசாவின் ஓரியன் விண்கலம்



(மொஸ்கோ)

ஆர்திமிஸ் 2 திட்டத்தை முன்னெடுத்து அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிலவுக்கு மனிதனை அனுப்ப நாசா தயாராகி வருகிறது.

அதற்காக ஒரு பெண் விண்வெளி வீராங்கனை உட்பட 4 பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள். இந்தநிலையில் தங்களை நிலவுக்கு அழைத்து செல்லும் ஓரியன் விண்கலத்தை முதல் முறையாக விண்வெளி வீரர்கள் நேரில் சென்று பார்த்தனர்.

புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் வைத்து ஓரியன் விண்கலத்தை ஆராய்ச்சியாளர்கள் பரிசோதித்து வருகிறார்கள்.

தங்களை உற்சாகப்படுத்தி கொள்ளவும் ஆயத்தப் பணிகளை முடுக்கி விடும் பணிக்காக விண் வெளி வீரர்கள் நிலவுக்கு அழைத்து செல்லவிருக்கும் விண்கலத்தை நேரில் பார்க்க அனுமதி வழங்கப்பட்டதாக நாசா அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் இந்த விண்கலத்தின் உறுதித்தன்மையை பரிசோதிக்கும் வகையில் பல்வேறு சோதனைகளுக்கு ஆராய்ச்சியாளர்கள் உட்படுத்தி வருகிறார்கள். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

## நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை வலியுறுத்து

(கொழும்பு)

**வீடுகள் அல்லது பணியிடங்களில் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கோரியுள்ளது.**

சுத்திகரிப்புக்காக நீர் பெறும் ஆதாரங்களில் நீர் வற்றிப் போகும் நிலை ஏற்பட்டுள் ளது.

வறட்சியான காலநிலை யினால் 20 நீர் விநியோக அமைப்புகள் பாதிக்கப்பட்டுள் ளதாக அதன் பிரதி பொது முகா மையாளர் அனோஜா களு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன் 41 நீர் வழங்கல் கட்டமைப்புகளின் நீர் விநி யோகம் குறையக் கூடிய சூழ் நிலை நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 180 | 160 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 350 | 400 |
| தக்காளி | 200 | 250 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 200 | 250 |
| கோவா | 250 | 200 | 280 | 300 |
| கரட் | 350 | 500 | 500 | 520 |
| பூசணி | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 80 | 70 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 150 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 220 | 350 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 140 | 150 |
| பாகற்காய் | 300 | 300 | 300 | 250 |
| வெண்டக்காய் | 100 | 60 | 60 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 170 | 160 | 200 |
| பயற்றங்காய் | 200 | 140 | 80 | 150 |
| லீக்ஸ் | 200 | 200 | 250 | 250 |
| பீற்றூட் | 120 | 160 | 160 | 200 |
| கறிமிளகாய் | 300 | 400 | 350 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 250 | 200 |
| போஞ்சி | 350 | 450 | 420 | 500 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 150 | 150 |
| கீரை – 1 பிடி | 100 | 70 | 50 | 100 |
| தேசிக்காய் | 350 | 250 | 250 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 70 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 | 50 |
| வல்லாரை | 50 | 30 | 30 | 60 |
| ஈரப்பலா | 100 | 250 | 100 | 80 |

# தென்மாகாணத்தில் மட்டும் 2 மணித்தியாலங்கள் மின்வெட்டு

## சிரேஷ்ட மின்சார பொறியியலாளர் சங்கம்

(கொழும்பு)

எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு பின் தென் மாகாணத்தில் சுமார் 10 நாட்களுக்கு இரண்டு மணி த்தியால மின்வெட்டு ஏற்படும் சாத்தியம் இருப்பதாக சிரேஷ்ட மின்சார பொறியியலாளர் சங்க த்தின் பேச்சாளர் நந்திக பத்தி ரகே தெரிவித்துள்ளார்.

எனினும் நாடளாவிய ரீதி யில் மின்வெட்டு இருக்காது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து நேற்று கருத்து தெரி விக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், மின் உற்பத்தி நிலையங்க ளுடன் தொடர்புடைய நீர்த் தேக்கங்களின் மொத்த நீர் கொள்ளளவு 31% ஆக குறைந் துள்ளது. சமனல ஏரி நீர்த்தேக் கத்தின் மொத்த கொள்ளளவு 16% இலிருந்து 7% ஆக குறை ந்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் போதிய மழை பெய்யாவிட்டால் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை யில் மட்டுமே மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும். அப்போது அவசர மின் கொள்முதல் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இல்லையெனில் மின்வெட்டுக்கு செல்ல நேரிடும் என்று எச்சரி த்துள்ளார்.

எவ்வாறாயினும் நாடளா விய ரீதியில் மின்வெட்டு இருக் காது. தென் மாகாணத்தில் மாத்திரம் இரவு வேளையில் ஒன்றரை முதல் இரண்டு மணி த்தியாலங்கள் வரை மின் வெட்டு மேற்கொள்ளப்படும்.

நுரைச்சோலை மின் உற் பத்தி நிலையத்தையும் அடுத்த வாரத்தில் இருந்து மீண்டும் தேசிய அமைப்பில் இணைத்து கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என வும் அவர் தெரிவித்தார். (நி-5)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2888

**சரண்**

என்னதான் களைப்பு, சோர்வு,மயக்கம் இருந்தாலும் புருஷன திட்டும் போது மட்டும் எங்கிருந்து தெம்பு வருதுன்னு தெரியல



ஏன்னா டிசைன் அப்படி

**கஸ்தூரி**

நாட்கள் செல்லச் செல்லத்தான் தெரிகிறது.



நல்லவன் என்ற பெயர் 10 பைசாவிற்கு கூட உதவாது என்று.

**வல்லவன்**

வேறு எந்த நாட்களிலும் எட்டு மணி ஆன போதும் விழிக்காத நம் விழி ஞாயிறு மட்டும் ஆறு மணிக்கே விழித்துக் கொள்ளும்.



**சர்மிளா**

வயிறு ரொம்ப வலிக்குதும்மா
வயித்துல ஒன்னும் இல்லன்னா அப்படித்தான் செல்லம்.




அப்போ நீ நேற்று தலைவலின்னு சொன்னது.

**காயத்திரி**

ஒரு கணவன் -மனைவி இரண்டு பேரும் கத்தரிக்காய் சாப்பிடவே மாட்டாங்களாம் ஏன் தெரியுமா?



ஏன்ன அது பிரிஞ்சால் (Brijal) ல அதான் சாப்பிட்டா பிரிஞ்சிடுவோம்ன்னு

**டினேஷ்**



நான் தூங்கி
எந்திரிக்கிறதுக்குள்ள
யாரோ என்
தலைல
தென்னைமரம்
நட்டுட்டாங்க.
அதுல
தேங்காய்
காய்ச்சுதுன்னா
எல்லாம்
என் தலைல
தான் விழும்.
இப்ப நான்
என்ன பண்ணுவேன்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடந்த 24 மணிநேரத்தில்

# வவுனியா மாவட்டத்தில் அதி உச்ச வெப்பம்

(வவுனியா)

**கடந்த 24 மணித்தியாலங்களில் அதிக வெப்பநிலை வவுனியா மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.**

இதன்படி, வவுனியா மாவட்டத்தில் 37.7 பாகை செல்சியஸ் அளவில் வெப்பநிலை பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் குறைந்த வெப்பநிலையாக நுவரெலியா மாவட்டத்தில் 12.6 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை நிலவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகளவான மழைவீழ்ச்சி மொனராகலை மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

இதன்படி, மொனராகலை மாவட்டத்தில் 63.7 மில்லிமீற்றர் வரையில் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் இன்றைய தினம் மழையுடனான வானிலை நிலவக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (4-5)

### அக்கராயன் கிராமத்திற்கு

## நிரந்தர கிராம அலுவலரை நியமிக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் கிராம அலுவலர் பிரிவிற்கு நிரந்தர கிராம அலுவலர் ஒருவரை நியமிக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த இரு ஆண்டுகளுக்கு மேலாக நிரந்தர கிராம அலுவலர் நியமிக்கப்படாததால் தற்காலிக கிராம அலுவலர்களே பணிக்கு வருகின்றனர்.

இதனால் பொதுமக்கள் கிராம அலுவலர் பணியில் இல்லாததன் காரணமாக தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் உப நகரமாக காணப்படுகின்ற அக்கராயனுக்கு நிரந்தர கிராம அலுவலர் இல்லாததன் காரணமாக இப்பிரிவில் வாழ்கின்ற 700 வரையான குடும்பங்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

குறிப்பாக பயிர்ச் செய்கைக் காலங்களில் யானைகளின் தொல்லை காணப்படுகின்ற நிலையில் யானை வெடிகளை கிராம அலுவலர் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் நிரந்தர கிராம அலுவலர் இல்லாததன் காரணமாக விவசாயிகள் யானை வெடிகளை கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

எனவே கரைச்சி பிரதேச செயலாளர் அக்கராயனுக்கு நிரந்தர கிராம அலுவலரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-350)

## வவுனியா இரட்டைக்கொலை சந்தேகநபர்கள் தொடர்ந்து மறியலில்

(வவுனியா)

வவுனியா தோணிக்கல் பகுதியில் வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்டதில் தம்பதிகள் மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை சிறைச்சாலையில் தடுத்து வைக்க வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிவான் அகமட் ரசீம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.


கடந்த மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நுழைந்து தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் உட்பட ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று வவுனியா வைத்தியசாலையில் ஆள் அடையாள அணிவகுப்பு திகதியிடப்பட்டிருந்த போதும் சாட்சியின் உடல் நிலை சீர் இல்லாத காரணத்தால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதனால் சாட்சி நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கவில்லை. இந்நிலையில் பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட 6 பேரையும் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கவும் மீண்டும் 24 ஆம் திகதி ஆள் அடையாள அணி வகுப்பிற்காக சாட்சிகளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (4-5-250)

## முள்ளியவளை பொதுச்சந்தையில் வன்முறைக் கும்பல் அட்டகாசம்

### வியாபாரம் பாதிப்பு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச சபையின் ஆளுகையின் கீழுள்ள முள்ளியவளை பொதுச் சந்தையில் நேற்று முன்தினம் இரவு அடையாளம் தெரியாத விசமிகள் சிலர் புகுந்து தாக்குதல் மேற்கொண்டதில் வியாபாரிகளின் மரக்கறிகள் உள்ளிட்ட சந்தை கட்டடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

காவலாளி சந்தையின் முன் கதவினை பூட்டிய நிலையில் வாகனத்தில் வந்த கும்பல் ஒன்று சந்தையின் கதவினை உடைத்து உள்ளே புகுந்து சந்தைக்குள் இருந்து மது அருந்த போவதாக காவலாளியுடன் முரண்பட்ட நிலையில் சந்தை கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.


இதனால் நேற்று காலை சந்தையினை பூட்டி பொலிஸார் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகள் வலியுறுத்தியுள்ளார்கள்.

முற்பகல் 10 மணிவரை பொலிஸார் வந்து விசாரணை செய்யும் வரை சந்தை நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

சம்பவ இடத்திற்கு முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் வருகை தந்ததுடன் கரைதுறைப் பற்று பிரதேச சபையின் செயலாளர் க.சண்முகநாதன் உள்ளிட்ட சபையின் உத்தியோகத்தர்கள் வந்து பார்வையிட்டுள்ளதுடன் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்தனர். (4-5-299)

## சட்டவிரோத துப்பாக்கியுடன் விலங்கு வேட்டை

### இருவர் கைது



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் காட்டில் வாழும் உக்குளான் எனப்படும் மிருகத்தினை சட்டவிரோத துப்பாக்கியால் சுட்டு வேட்டையாடிய இருவரை முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் முள்ளியவளை 3 ஆம் வட்டாரப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மக்கள் செறிந்து வாழும் குறித்த பகுதியில் பற்றைக்காட்டில் இருந்து சென்ற குறித்த மிருகத்தினை சட்டவிரோத துப்பாக்கி கொண்டு சுட்டு வேட்டையாடியுள்ளார்கள். இந்த சம்பவத்தின் போது ஹிச்சிராபுரம் மற்றும் முறிப்பு பகுதியினை சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

இவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட வேட்டையாடிய மிருகம் மற்றும் சட்டவிரோத துப்பாக்கி என்பனவற்றுடன் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர். (4-5-299)

### பொதுமக்கள் அவதானம்

## ஆபத்தான நிலையில் வட்டுவாகல் பாலம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரத்திற்கான பிரதான பாதைகளில் ஒன்றாக காணப்படுகின்ற ஏ-35 தர வீதியின் வட்டுவாகல் பாலமானது எந்தவித புனரமைப்புக்களுமின்றி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு சேதமடைந்து காணப்படும் பாலமானது அடிக்கடி உடைவுகள் ஏற்படும்போது தற்காலிக புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றதே தவிர நிரந்தர புனரமைப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது பாலத்தின் மையப்பகுதியில் உடைவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் பாரிய குழியும் காணப்படுகின்றது.

தற்போது பாலத்தில் பல்வேறு இடங்களில் வெடிப்புக்களும் வீதி பாதுகாப்பு அற்றதாகவும் வீதியில் சில இடங்களில் தாழிறங்கியும் காணப்படுகிறது. பலதடவைகள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்து கூறியும் புனரமைப்பு பணிகள் எவையும் நடைபெறவில்லை.

இனி வரும் காலம் மழையுடன் கூடிய காலமாகையால் நீர்மட்டம் உயர்ந்து பாலத்தை மேவிசெல்வதோடு, கனரக வாகனங்களும் இதன் ஊடாக செல்லும் போது மேலும் உடைவு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அப்பாலத்தினூடாக பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் தெரிவித்துள்ளனர். (4-5-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**கல்கியின்** **பாகம் - 1**

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர்

**254**





இன்னும் கொஞ்சம் நெருங்கிச் சென்று பார்த்ததில் அவர்கள்தான் முன்னொரு தடவை நந்தினியைப் பழையாறை அரண்மனைத் தோட்டத்துக்கு அழைத்து வந்தவர்கள் என்று தெரிந்தது. என்னைப் பார்த்ததும் அவர்களுடைய துக்கமும் பீதியும் பன்மடங்கு ஆயின.

முதலில் அவர்களால் எதுவுமே பேச முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அவர்களைத் தைரியப்படுத்தி விசாரித்தேன். ஆற்றுக்கு அக்கரையில் இருந்த கிராமத்தில் அவர்களுடைய மூத்த குமாரி இருந்தாளாம். அவளுக்குப் பிரசவ காலம் என்று அறிந்து அவளைப் பார்த்து வரப் போயிருந்தார்களாம். நந்தினி அவர்களுடன் வர மறுத்து விட்டாளாம். மனம் போனபடி நடந்து பழக்கமுள்ள அந்தப் பிடிவாதக்காரப் பெண்ணை ஒன்றும் செய்ய முடியாமல் அவர்கள் மட்டும் போய் விட்டுத் திரும்பி வந்தார்களாம். வழியில் யாரோ சில முரடர்கள் ஒரு பெண்ணைக் காலையும் கையையும் கட்டி, எரிந்து கொண்டிருந்த சிதையில் பலவந்தமாகப் போட முயன்றதை அவர்கள் பார்த்தார்களாம். யுத்த காலத்தில் இத்தகைய விபரீதங்கள் நடப்பது இயல்பு என்று எண்ணி அவர்களுக்கு அருகில் போகவும் பயந்து கொண்டு விரைவாக இங்கே வந்து சேர்ந்தார்களாம். வந்து பார்த்தால் குடிசைகள் பற்றி எரிந்து கிடந்தனவாம். நந்தினியையும் காணவில்லையாம். இந்த விவரத்தைச் சொல்லிவிட்டு அர்ச்சகரும் அவர் மனைவியும், 'இளவரசே! எங்கள் மகள் எங்கே? எங்கள் அருமைக் குமாரி எங்கே?' என்று கதறினார்கள். அவர்கள் நந்தினியின் உண்மைப் பெற்றோர்கள் அல்லவென்று எனக்கு முன்னமே தெரிந்திருந்தது. இப்போது அது சர்வ நிச்சயமாயிற்று. உண்மையில் பெற்றவர்களாயிருந்தால் இப்படித் தனியாக விட்டு விட்டுப் போயிருப்பார்களா? ஆகையால் அவர்கள் பேரில் எனக்கு இரக்கமோ அனுதாபமோ உண்டாகவில்லை. நந்தினியின் கதியைப் பற்றிச் சொல்ல முடியாத துக்கம் ஏற்பட்டு நெஞ்சை அடைத்தது. 'உங்கள் மகள் எரிந்த சிதையைத் தேடிப் போய் நீங்களும் எரிந்து செத்துப் போங்கள்!' என்று வயிற்றெரிச்சல் தீர அவர்களைச் சபித்து விட்டு, திரும்பிப் பொழுது விடிவதற்குள் பாசறைக்கு வந்து சேர்ந்தேன். நீங்கள் எல்லாரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தீர்கள். நான் போனது, திரும்பி வந்தது ஒன்றும் உங்களில் யாருக்கும் தெரியாது."

"ஆம் இளவரசே! தெரியாதுதான். அதற்குப் பிறகும் இத்தனை காலமாக இதையெல்லாம் தங்கள் மனத்திலேயே வைத்துக் கொண்டிருந்ததை நினைத்தால் வியப்பாயிருக்கிறது. சிநேக தர்மத்துக்கு இவ்வளவு மாறாகத் தாங்கள் நடந்து கொள்வீர்கள் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. தங்களுடைய நிலையில் நான் இருந்திருந்தால் தங்களிடம் சொல்லாமல் இருந்திருக்க மாட்டேன்" என்றான் பார்த்திபன்.

"ஆனால் நீ என்னுடைய நிலையில் இல்லையே, பார்த்திபா! இந்த உலகில் யாருமே என்னுடைய நிலையில் இருந்திருக்க முடியாது. என் நிலையில் இருந்திருந்தால், நீ எப்படி நடந்து கொண்டிருப்பாய் என்று யார் சொல்ல முடியும்?" என்றான் கரிகாலன்.

"அரசே! நடந்து போனதைப் பற்றி இப்போது நமக்குள் விவாதம் வேண்டாம். அப்புறம் என்ன நடந்தது? நந்தினியைப் பிறகு எப்போது பார்த்தீர்கள்? பழுவூர் இளையராணி ஆன பிறகா? அதற்கு முன்னமேயா?"

"அதற்கு முன்னால் நான் பார்த்திருந்தால், அவள் பழுவூர் ராணி ஆகியிருக்கமாட்டாள். பழுவேட்டரையரின் கலியாணம் நடந்தபோது நானும் நீயும் ஊரில் இல்லை. அந்தச் செய்தி வந்தபோது நாம் இருவரும் அருவருப்போடு பேசிக் கொண்டது உனக்கு நினைவில் இருக்குமே? அதற்குச் சில நாளைக்குப் பிறகு எனக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## இரண்டு புலிக்கு எங்கே போவேன்?



ஓர் ஊரில் பெண் ஒருத்தி இருந்தாள். அவளுக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. அவள் கணவன் வணிகத்திற்காக வெளியூர் சென்றிருந்தான்.

பல நாட்களுக்குப் பிறகு அவனிடமிருந்து கடிதம் வந்தது. நீயும் குழந்தைகளும் இங்கு வந்து சேருங்கள். நாம் வளமாக வாழலாம், என்று அதில் எழுதியிருந்தது.

தன் குழந்தைகளுடன் மாட்டு வண்டியில் ஏறினாள் அவள். வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டாள்.

அடர்ந்த காட்டு வழியாக வண்டி சென்று கொண்டிருந்தது.

ஆபத்து வரப் போவதை மாடுகள் உணர்ந்தன. கயிற்றை அறுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தன.

ஐயோ! என்ன செய்வேன்? நடுக் காட்டில் குழந்தைகளுடன் சிக்கிக் கொண்டேனே! இங்கே புலி பலரை அடித்துக் கொன்றதாகக் கேள்விப் பட்டுள்ளேனே என்று நடுங்கினாள் அவள்.

அருகிலிருந்த மரத்தின் கிளையில் குழந்தைகளுடன் அமர்ந்தாள் அவள்.

சிறிது தூரத்தில் பயங்கரமான புலி ஒன்று வந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த அவள் அதனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தாள்.

நல்ல வழி ஒன்று அவளுக்குத் தோன்றியது.

இரண்டு குழந்தைகளின் தொடையிலும் அழுத்திக் கிள்ளினாள். இருவரும் காடே அலறும் படி அழத் தொடங்கினார்கள்.

குழந்தைகளே! அழாதீர்கள், நான் என்ன செய்வேன். இப்படி நீங்கள் அடம் பிடிப்பது சிறிதும் நல்லது அல்ல. நேற்றுத்தான் நீங்கள் உண்பதற்கு ஆளுக்கொரு புலி பிடித்துக் கொடுத்தேன். இன்றும் அதே போல ஆளுக்கொரு புலி வேண்டும் என்கிறீர்களே. இந்தக் காட்டில் புலியை நான் எங்கே தேடுவேன்? எப்படியும் இன்று மாலைக்குள் நீங்கள் சாப்பிட ஆளுக்கொரு புலி தருகிறேன். அதுவரை பொறுமையாக இருங்கள் என்று உரத்த குரலில் சொன்னாள்.

இதைக் கேட்ட புலி நடுங்கியது, நல்ல வேளை! அருகில் செல்லாமல் இருந்தேன். இந்நேரம் நம்மைப் பிடித்துக் கொன்றிருப்பாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப் பதிலிருந்து தான் வலிமையெல்லாம் கிடைக்கிறது.

– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியப் பிரதமர் மோடியை ஏமாற்றலாம் என்று நினைத்தால்...

13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவது தொடர்பில் சிங்கள அரசியல் தரப்புகள் குத்தி முறிவதைக் காண முடிகின்றது.

காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் நீங்கலாக, 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தினால், என்ன? என்ற நோக்கத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடும் முயற்சி செய்கின்றார்.

இதற்காக அவர் தமிழ் அரசியல் தரப்புகளைச் சந்தித்து வருகிறார்.

சில இடங்களில் தமிழ்த் தலைவர்களை அதட்டவும் பார்க்கிறார்.

அதேநேரம் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை யாவது அமுல்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இல்லையேல் நிலைமை மோசமாகும் என்ற கருத்து நடுநிலை நின்று சிந்திக்கின்ற பொதுமக்களிடம் உண்டு.

எதுஎவ்வாறாயினும் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தாமல் தப்பமுடியாது என்ற உண்மையை சிங்கள ஆட்சித் தரப்பும் அரசியல் தரப்புகளும் நன்கு உணர்ந்துள்ளன.

சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ போன்றவர்கள் 13ஆவது திருத்தச் சட்டமூலம் அமுலாகுவதை எதிர்த்துக் கருத்துரைக்கின்றனர்.

ஆனால் அவர்களுக்கு நன்கு தெரியும்; 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தாவிட்டால், இந்தியப் பிரதமர் மோடியிடம் இருந்து தப்ப முடியாது என்று.

இருந்தும் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கு சிங்களத் தரப்புகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன என்பதை வெளிப்படுத்துவதற்கான ஓர் ஏற்பாடாகவே சரத் வீரசேகரவினதும் விமல் வீரவன்ஸவினதும் முழக்கம் இருக்கிறது.

இவை ஒருபுறமிருக்க, 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவது தொடர்பில் எங்கள் தமிழ் அரசியல் தரப்புகள் ஏடாகூடமாகக் கதைத்து விடுவார்களோ என்ற ஏக்கமும் இருக்கவே செய்கிறது.

அதிலும் இரா.சம்பந்தர் அவர்களின் கதையைப் பார்க்கும்போது, திரும்பவும் ஒரு பெரும் போராட்டத்தை நடத்துவேன் என்பது போல இருப்பதுதான் மிகப் பெரும் தலையிடி.

என்ன செய்வது மருந்துக்கும் இராஜதந்திரம் இல்லாத நம் தமிழ் அரசியலில் அதிர்ஷ்டவசமாகக்கூட நல்லது நடப்பதற்கான வாய்ப்பில்லை.

ஆனாலும் ஒரேயொரு நம்பிக்கை மட்டும் உண்டு. அதுதான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் அரசியல் இராஜதந்திரம்.

ஆம், கடந்த காலங்களில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனக் கூறி தமிழ் மக்களையும் உலக நாடுகளையும் இலங்கை ஆட்சியாளர்கள் ஏமாற்றியது போல, பிரதமர் மோடியை ஏமாற்ற முடியாது.

ஆகையால் என்ன பாடுபட்டும் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுலாக்கியே ஆக வேண்டும்.

இதிலிருந்து இலங்கை அரசாங்கம் விலகுமாக இருந்தால், அதற்கான இந்தியாவின் பதிலடி பாரதூரமானதாக இருக்கும் என்பது சர்வநிச்சயம்.

# விவசாயத் துறையில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

விவசாய நவீனமயப் படுத்தல் செயற்பாடுகள் மூலம் நாட்டின் விவசாயத் துறையில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தும் பணிகளை துரிதப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

விவசாயத்துறை நவீனமயப்படுத்தல் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விவசாயத்துறை நவீனமயப்படுத்தல் தொடர்பாக ஜனாதிபதிக்கும் விவசாயத் துறை அதிகாரிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது விவசாயம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயலணியொன்றை உருவாக்கவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, பெருந்தோட்ட நீர்ப்பாசன, மாகாவலி அபிவிருத்தி அமைச்சுக்களை இணைத்து தனியார் துறையின் பங்கேற்புடன் மேற்படி செயலணியை நிறுவ எதிர்பார்த்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாய நவீன மயப் படுத்தலுக்கான செயலகமொன்றை ஸ்தாபிப்பதற்கான வரைவு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை இரு வாரங்களுக்குள் பெற்றுத் தருமாறு அதிகாரிகளுக்கு வலியுறுத்திய ஜனாதிபதி, தேவை ஏற்படுமாயின் அச்செயற்பாடுகளுக்காக பாராளுமன்றக் குழுவொன்றை நியமிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

விவசாயம் இந்நாட்டு பொருளாதாரத்தின் பிரதான அங்கமாக காணப்படுகிறது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதனை அமைச்சு அல்லது சில நிறுவனங்களுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்த முடியாதெனவும், அரச மற்றும் தனியார் துறைகள் உரிய ஒருங்கிணைப்புடன் விவசாயத்தை நவீனமயப் படுத்தும் பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அதேபோல் பழைமையான முறைமைகளுக்கு மாறாக புதிய முறையில் சிந்தித்து சிறந்த பிரதிபலன்களை அடையும் வகையில், விவசாயத்தை நவீனமயப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இதுவரையில் விவசாயத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் மாத்திரமே இடம்பெற்றதாகவும், அதனால் நாட்டுக்கு எவ்வித பலன்களும் கிடைக்க வில்லை என்றும் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, உரிய முகாமைத்துவத்தின் கீழ் விவசாய திட்டமிடல்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி யுள்ளார்.

அத்துடன், நவீன விவசாய உபகரணங்களை உற்பத்தி செய்யும் தாய்லாந்து போன்ற நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமாறும் ஜனாதிபதி விவசாய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

காலநிலை மாற்றம் தொடர்பான இலக்குகளை அடையும் வகையில் இந்த பணிகளை செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், முறையான நீர் முகாமைத்துவத்தை பராமரிப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி விளக்கியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க, துறைசார் அமைச்சுகளின் செயலாளர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** பிரிட்டிஷ் கவுன்சில் ரக்கா வீதி, இயற்கை விஞ்ஞான பீடம், தியாகி அறக்கொடை நிலையம், றியோ கிரீம் ஹவுஸ், அரசடி பழம் வீதி சந்தி, கைலாசபிள்ளையார் கோவில், நல்லூர் கோயில், நாவலர் வீதி இராசாவின்தோட்டம், பருத்தித்துறை வீதி, ரக்கா வீதி, சுண்டிக்குளி, கோயில் வீதி, இராமநாதன் விதி புகையிரத குறுக்கு சந்தி ஐஸ் தொழிற் சாலை சுப்பர் மடம், தொலைத் தொடர்பு - மாலுசந்தி, இலகடி, இன் பருட்டி, இன்பருட்டி பிள்ளையார் கோவில், காந்தியூர், மாலுசந்தி, மந்திகை அம்மன் கோவில், முத்து மாரியம்மன் கோவில் அல்வாய், நாவலடி ஸ்ரீ லங்கா பாடசாலையடி, வதிரி உடுப்பிட்டி பருத்தித்துறை வீதி சந்தி, வியாபாரிமூலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ், பல் மெய்ரா ஹவுஸ், தலை மன்னார், தலைமன்னார் வைத்திய சாலை, தலை மன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, Gretto of Lady Lourds Church பேசாலை, கட்டு காரங்குடி யிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப் பண்ணை, பாவிலுப்பட் டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலை மன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலை மன்னார் தலை மன்னார் புகையிரத புகையிரத நிலையம், துள்ளுக்குடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

### குற்றச்செயல்களை கட்டுப்படுத்த

# நல்லூர் திருவிழாவில் கடும் கண்காணிப்பு

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

இந் நிலையில் ஆலய வளாகத்தில் இடம் பெறும் திருட்டுக்கள், வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்காக யாழ்ப்பாண மாநகர சபையினால் 50 இற்கும் மேற்பட்ட கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் தெரிவித்தார்.

நல்லூர் கந்தன் ஆலய திருவிழா முன்னேற்பாடுகள் தொடர்பான கூட்டம் ஒன்று யாழ்ப்பாண மாநகர சபையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதன்போது புதிய கட்டுப்பாடுகள், நடைமுறைகள், தீர்மானங்கள் தொடர்பிலும் பொதுமக்களுக்கான அறிவுறுத்தல் தொடர்பிலும் மாநகரசபையின் ஆணையாளர் த.ஜெயசீலன் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார். (4-5-104)

# கலைஞானச்சுடர் இளங்கலைஞர் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவினை முன்னிட்டு கலைஞர்களினை கௌரவிக்கும் பொருட்டு கலைஞானச் சுடர் விருது மற்றும் இளங் கலைஞர் விருது வழங்கப் படவுள்ளது.

இதற்கு தகுதி வாய்ந்த கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. விருதுக்கான விண்ணப்பங்களினை நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமெனவும் நல்லூர் பிரதேச செயலாளர் அறி வித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

04



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு

உட்கட்டமைப்பு திட்டங்களை மேம்படுத்த பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களை தங்களின் சுயநலத்துக்கு பயன்படுத்துவதில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்ட அரசியல்வாதிகளின் செயற்பாடுகளும் இந்த நெருக்கடிக்கான காரணங்களில் ஒன்றாக கூறப்படுகிறது.

கடன் நெருக்கடிக்கு சிலர் சீனாவைக் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால், அவுஸ்திரேலிய லோவி நிறுவனத்தின் (Lowy Institute) தகவலின்படி 2021 ஏப்ரல் நிலவரப்படி சீனாவுக்குச் செலுத்த வேண்டிய கடனானது வெளிநாட்டுக் கடன்களில் 10% மட்டுமே என்பதால், இலங்கை “சீனக் கடன் பொறியில் சிக்கவில்லை” என்று சுட்டிக்காட்டியது. மேலும், இலங்கையின் பெரும்பாலான வெளிநாட்டுக் கடன் பங்குகள் சர்வதேச மூலதனச் சந்தைகளிருந்து பெறப்பட்டன. இது 47% ஆக இருந்தது. அடுத்து 22% வளர்ச்சி வங்கிகளில் பெறப்பட்டவை. அதனைத் தொடர்ந்து ஜப்பான் இலங்கையின் வெளிநாட்டுக் கடனில் 10% ஐக் கொண்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டிருந்தது. இதனைப் படம் 1 இல் காணலாம்.

2009 இல் முடிவடைந்த ஒரு பேரழிவுகரமான உள்நாட்டுப் போருக்குப் பிறகு, நாட்டின் மறுகட்டமைப்பு செயல்முறைக்காக அரசாங்கம் சர்வதேச முறி (bond) சந்தைகளில் இருந்து விலையுயர்ந்த கடன் வாங்குவதை நாடியது. படம் 1ஐ பார்க்கும் போது தெரிவது இலங்கை வெளிநாட்டுக் கடனில் (47 சதவீதம்) பெரும் பகுதியை அமெரிக்க பிளாக் ராக் (American Black Rock) மற்றும் பிரிட்டிஷ் ஆஷ்மோர் (British Ashmore) போன்ற மேற்கத்திய நிதி முதலீட்டாளர்களிடமிருந்து (சர்வதேச முறி (bond) சந்தைகளில் இருந்து) பெற்றுக்கொண்டுள்ளது.

இவற்றுள், 2017 இல் முதிர்ச்சியடைந்த கடனில் சிலவற்றை திருப்பிச் செலுத்துவதற்கான போராட்டம் தான், அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு வழங்க இலங்கை அரசாங்கத்தை தள்ளியது. அதாவது சர்வதேச சந்தைகளுக்கு கடனை திருப்பி செலுத்த பயன்படுத்தப்பட்ட $790 மில்லியனுக்கு ஈடாக சீனா அம்பாந் தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு (இந்த வாய்ப்பை) ஏற்றுக்கொண்டது.

2020 ஆம் ஆண்டில், நியூயோர்க்கை தளமாகக் கொண்ட ஒரு நிறுவனம், இலங்கையின் அப்போதைய நிதி ஆதாரங்கள் 2021 ஆம் ஆண்டில் 4.0 பில்லியன் டொலர்கள் எனவும் அது மதிப்பிடப்பட்ட கடன் சேவைத் தேவைகளை ஈடுகட்ட போதுமானதாக இல்லை என்றும் கூறியது. இவ்வாறு கூறப்பட்ட பொருளாதார சிக்கல்களைத் தீர்க்க சரியான பொருளாதார திட்டங்களைத் தீட்டுவதற்கு மாறாக, மேலும் மேலும் பணத்தாள்களை அச்சிட்டு புழக்கத்தில் விட்டதால் பணவீக்கம் அதிகரித்து நாடு கடனில் மேலும் மூழ்கியது.

இலங்கை வெளிநாட்டுக் கடன்கள்
ஏப்பிரல் 2021 (US$)




படம்-1

கடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, இலங்கைக்கு நம்பகமான நிதித் திட்டம் மற்றும் நாணயக் கொள்கை தேவை என்றும், கடனைத் திருப்பிச் செலுத்த ஏதுவாக வரிகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், வட்டி விகிதங்களில் மாற்றங்கள் மற்றும் இறக்குமதிகளை அனுமதிப்பது போன்றவை வரி வருவாய் மீண்டும் திறைசேரிக்குச் செல்ல ஏதுவாகும் என்றும் பொருளியல் வல்லுநர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

உள்நாட்டுக்கடன்களைக் குறைப்பதன் மூலம் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக வட்டி விகிதங்களை உயர்த்துவது மற்றும் டொலர்களை ஈட்டுவது சாத்தியம் என்றாலும், அதை பல ஆண்டுகள் தொடர்ந்து செய்வது நடைமுறையில் கடினம். கடனைத் திருப்பிச் செலுத்திய பிறகு அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரிப்பதை முதலீட்டாளர்கள் கண்டால், நம்பிக்கை மீண்டும் வரலாம். ஆனால் இது தற்போதைய சித்தாந்தத்தின் அடிப்படையில் வேலை செய்யலாம் அல்லது வேலை செய்யாமலும் போகலாம் என்றும் பொருளியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

### உலக மட்டத்தில் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் அதிகரிப்பு

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு எண்ணெய் மற்றும் எரிவாயு மற்றும் அவற்றின் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதியும் ஒரு முக்கிய காரணமாகும்.

ஏனெனில் இலங்கை எண்ணெய் மற்றும் எரிவாயு இறக்குமதி மற்றும் போக்குவரத்து மற்றும் மின் உற்பத்தி ஆகியவற்றில் பெருமளவில் சார்ந்துள்ள ஒரு நாடாகும்.

சமீபத்திய ஆண்டுகளில் இவற்றின் விலைகள் உலக மட்டத்தில் அதிகரித்திருந்தன. மேலும் அண்மைக் காலங்களில் இவற்றின் விலை மிக வேகமாக அதிகரித்திருந்தது.

### பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை உற்பத்தி வீழ்ச்சி

இலங்கையின் பொருளாதாரத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளான தேயிலை, இறப்பர், கொக்கோ, கராம்பு போன்றவையே பிரதான வருவாயாக விளங்கியது. அண்மைக் காலங்களில் பெருந்தோட்டங்கள் சரியான முறையில் முகாமைத்துவம் செய்யாததால் அவ்வருமானம் வீழ்ச்சியடைந்து விட்டது.

### வீட்டுப் பணிப்பெண்களாக பணி புரிவோரின் வருமானம்

இலங்கையின் பிரதான வருமானமாக வெளிநாட்டு பணியாளர்கள் ஊடாகவே கிடைக்கின்றது. குறிப்பாக மத்திய கிழக்காசிய நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாக பணிபுரிவோரின் ஊடாகவே பெறப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக, வெளிநாட்டில் உள்ள பணியாளர்களின் (இலங்கைப் பிரஜைகளின்) வருடாந்தப் பணம் இலங்கைக்கான வெளிநாட்டு வருமானத்தின் மொத்த வரவுகளில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது. இருந்தாலும் வெளிநாட்டு பணம் அனுப்புதல் 2020 இல் 7 பில்லியன் டொலரிலிருந்து 2021 இல் 5 பில்லியன் டொலராகக் குறைந்துவிட்டது. இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் உண்டியல் பரிமாற்றமே என்று கூறப்படுகிறது.

### சுற்றுலாத் துறையின் வீழ்ச்சி

அதனைத்தவிர சுற்றுலா, புடவை போன்றவற்றில் இருந்து கணிசமான வருவாய் கிட்டுகின்றன. மேலும் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் தமது குடும்பத்தாருக்கு உதவி வரும் நிதி போன்றனவும் இலங்கைக்கான ஒரு வருவாய் மார்க்கமாக உள்ளது. இலங்கை சுற்றுலா அதிகார சபையின் கூற்றுப்படி சுற்றுலாத் துறையின் வீழ்ச்சி பொருளாதார நெருக்கடிக்கான மிகப் பெரிய காரணமாக கூறப்படுகின்றது.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்னல் தாக்கி...

இவ்வாறு மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மாலை சுமார் ஏழு பேர் கொண்ட குழுவொன்று தம்மன்னாவ வாவியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இந்த மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

44 மற்றும் 46 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் தம்மன்னாவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## யாழ்ப்பாண...

வர் வெளிநாட்டுக்கு எடுப்பதாக கூறிய நிலையில், யாழ்ப்பாணம் வலிகாமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தரகர் மூலம் குறித்த இளைஞனை அணுகியுள்ளார்.

இளைஞனிடம் சகல விபரங்களையும் பெற்றுக்கொண்ட தரகர் போலி விசாவினை இத்தாலியில் வசிக்கும் நபர் மூலம் பெற்றுக்கொண்டு இளைஞனுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த விசாவினை தூதரகத்திடம் காண்பித்தபோது குறித்த வேலை வாய்ப்புக்கான விசா போலியானது என உறுதிப்படுத்தப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த பாதிக்கப்பட்ட இளைஞன், இத்தாலியில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரே பிரதான சூத்திரதாரி.

இவர் முல்லைத்தீவு பெண் ஒருவரை முதலில் திருமணம் செய்து இரு பிள்ளைகள் இருப்பதாகவும் பின்னர் அவர்களை கைவிட்டு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த யுவதி ஒருவரை மறுமணம் செய்திருப்பதாகவும் தெரிவித்தார்.

குறித்த நபர் என்னைப் போன்ற பலரிடம் வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி பல கோடி ரூபாய்களை பெற்றுள்ளதாகத் தெரிவித்தார். (ம-7,33,104)

## வாள்களுடன்...

பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, வைரவபுளியங்குளம், ஜங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தின் முன் நின்ற இளைஞர்கள் மீது புதன்கிழமை மாலை வாள் வீசி சிலர் அட்டகாசம் செய்துள்ளனர்.

இதன்போது நிலைமையை கட்டுப்படுத்த முயன்ற புலனாய்வு துறையைச் சேர்ந்த ஒருவர் மீதும் வாள் வீசி தாக்குதல் மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்றதும் வாள்களுடன் நின்றவர்கள் தப்பிச் சென்றிருந்தனர்.

இதனையடுத்து, குறித்த சம்பவம் தொடர்பில் களமிறங்கிய விசேட அதிரடிப் படையினர் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய தேக்கவத்தை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கைது செய்து வவுனியா பொலிஸில் ஒப்படைத்தனர்.

மற்றும் ஒரு நபர் வவுனியா பொலிஸில் சரணடைந்துள்ளார். (ம-7,250)

## இராவண...

தமிழ் பூர்வீகம் என்பது பொய் என்பதை எடுத்துரைக்கும் வகையில் இலங்கையில் சின்னங்கள் காணப்படுகின்ற போது இராவணனை தமிழர் என்று குறிப்பிடுவதையிட்டு வெட்கப்பட வேண்டும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இராவண மன்னன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன முன்வைத்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இராவணன் இந்தியாவுக்கு விமானத்தில் சென்று சீதாவை கடத்தி வந்ததாக குறிப்பிட்டால் பெரும்பாலானோர் நம்புவதில்லை. எமது வரலாற்றில் இன்றும் உயிர் துடிப்பாக உள்ள விடயங்கள் வியப்புக்குரியதாக உள்ளது.

மன்னராட்சி காலத்தில் சிங்கள பொறியியலாளர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு வரலாற்று சின்னங்கள் மற்றும் தொல்பொருள் சின்னங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறான நிலையில் இராவணன் விமானத்தில் சென்று சீதாவை கொண்டு வந்ததாக குறிப்பிடுவதை மறுக்க முடியாது என்று குறிப்பிடுகிறேன்.

இராவண மன்னன் இயக்கர் குலத்தைச் சேர்ந்த சிங்களவர். இராவணன் தமிழர் என்று குறிப்பிட்டுக் கொண்டு இனவாதத்தை தூண்டிவிட முயற்சிக்கிறார்கள்.

தமிழ் பூர்வீகம் என்பது பொய் என்பதை எடுத்துரைக்கும் வகையில் இலங்கையில் சின்னங்கள் காணப்படுகின்ற போது இராவணனை தமிழர் என்று குறிப்பிடுவதையிட்டு வெட்கப்பட வேண்டும்.

மகாவம்சத்தில் இராவணன் சிறந்த தலைவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இராவணனின் படை கொடியில் சிங்கச் சின்னம் உள்ளது.

இந்தியா இராவணன் மீது இன்றும் அச்சம் கொண்டுள்ளதால் தான் வருடாந்தம் அவரது உருவத்தை எரிக்கிறார்கள். ஆகவே இராவணன் சிங்கள தலைவர் என்றார். (ம-7)

## தெல்லிப்பழை...

வெள்ளிக்கிழமை மதியம் பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை முடிவடைந்ததும் பாடசாலை பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய உயர்தர மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த திங்கட்கிழமை உயர்தர மாணவர்களின் மதிப்பீட்டு அறிக்கை தொடர்பாக பெற்றோருக்கான கலந்துரையாடல் இடம்பெற்றபோது கலந்துரையாடலுக்கு வராத பெற்றோர்களின் மாணவர்களை அதிபர் வகுப்புக்கு வெளியே நிறுத்தி வைத் தார்.

இதன் போது பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் மாணவிகளிடம் சாதாரணமாக உரையாடுவது போன்று உரையாடி - அதனை ரகசியமாக தனது தொலைபேசியில் காணொளி எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியிருந்தார். குறித்த ஆசிரியர் பாடசாலைக்கும், மாணவிகளுக்கும் களங்கத்தை ஏற்படுத்தினார். அவரை இடமாற்றுமாறு கோரியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த தெல்லிப்பழை கோட்டக் கல்வி பணிப்பாளர் வேலாயுதர் அரசகேசரி மாணவர்களுடன் கலந்துரையாடியதுடன் அவரிடம் மாணவர்களினால் கோரிக்கை கடிதமும் வழங்கப்பட்டது.

இதனை வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக வாக்குறுதி வழங்கியதை அடுத்து மாணவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## வட மாகாண...

நாட்டின் பல மாகாணங்களில் நிலவும் கடும் வறட்சியானது வட பிராந்தியத்தையும் பாதித்துள்ளதுடன், தற்போது வடக்கில் 22,666 குடும்பங்களைச் சேர்ந்த 72,357 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத் துவ நிலையங்களின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் உள்ள குளங்களில் நீர் மிக வேகமாக வற்றிவிட்டதாகவும், குடிநீர் விநியோகம் செய்யப்படும் கிணறுகள் உட்பட பல நீர் ஆதாரங்கள் முற்றாக வற்றி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வறட்சியின் காரணமாக ஏராளமான நெற்செய்கைகள் அழிந்து வைக்கோலாக மாறியுள்ளதாகவும், கால்நடைகளுக்கு உண்பதற்கு புல் இல்லை எனவும், ஆடு போன்ற விலங்குகளுக்கு இலைகள் இல்லை எனவும், குடிநீரின்றி தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)


மெகா பவர்
திகதி 11/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1551
K 26 10 11 42 51
74606

தன நிதானய
திகதி - 2023.08.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1233
S 07 67 68 79 S
36912

லக்கி 7
திகதி 11.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0029
L7 இலக்கம் 2 2
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 1 2 3 7 2 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3445
சீட்டிழுப்பு திகதி 11.08.2023
U 03 14 26 67
U 20270

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.08.11
சீட்டிழுப்பு இலக்கம் 512
துலாம் 08 31 46 55 துலாம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/11
சீட்டிழுப்பு இலக்கம் 5203
C 5 1 2 8 8 0

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2177 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.08.11 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 26 31 32 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,427,260.40
இரண்டாம் வரம் 01 03 21 33 I

சனிதா
திகதி 2023.08.11 வெற்றி வாரம் 4338 வர்ணம் செம்மஞ்சள்
04 29 46 58 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,933,092.00
இரண்டாம் வரம் 19 39 65 73 Q

சசிரி
வெற்றி வாரம் 361
சீட்டிழுப்பு திகதி 2023.08.11
வெற்றி இலக்கங்கள் 05 08 27
பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,331,840/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3889 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.11 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 31 32 46 57 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,393,788/-
இரண்டாம் வரம் 04 06 12 50 மீனம்

கப்ருக
திகதி 11.08.2023 வெற்றி வாரம் 1353 வர்ணம் ஊதா
X 28 04 09 36 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 427,031,584.20
இரண்டாவது வாய்ப்பு 21 33 35 75 D

அட கோடீபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2003
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்புத் திகதி : 2023.08.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,998,584/-
21 45 47 64 O
இரண்டாம் வரம் 03 28 29 30 E


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழ்.மாநகர...

குழந்தை ஒன்றின் தலை மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத சடலங்கள், சத்திர சிகிச்சையின் போது அகற்றப்படும் உடல் உறுப்புக்கள் என்பவை மாநகர சபை ஊடாக கோம்பயன்மணல் மயானத்திலேயே புதைக்கப்பட்டு வந்துள்ளது.

அவ்வாறு புதைக்கப்படுவதை மாநகர சபை பணியாளர்கள் உரிய முறையில் புதைப்பதில்லை. அதனால் நாய்கள் உள்ளிட்ட விலங்குகள் அவற்றை இழுத்து செல்வதாகவும், அதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதால், அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வந்துள்ளனர்.

இந்நிலையிலையே, யாழ்.மாநகர சபை ஆணையாளர், அப்பகுதிக்கான பொது சுகாதார பரிசோதகர் மற்றும் கோம்பயன் மணல் மயானத்திற்கு பொறுப்பான உத்தியோகஸ்தர் ஆகிய மூவரையும் எதிர்வரும் 16ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு நீதவான் கட்டளையிட்டுள்ளார்.(ம-7.33.104)

## மரண தண்டனை...

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் மேனகா விஜயசுந்தர, சசி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய நீதிமன்ற அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியை சேர்ந்த 85 வயதுடைய தேவராசா லில்லி மேரி என்பவரை, 2008ம் ஆண்டு மார்கழி மாதம் 29ம் திகதி கொலை செய்ததாக, இறந்தவரின் வீட்டில் வசித்து வந்த குணபாலசிங்கம் ஜெறோம் என்பவருக்கு எதிராக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்கு தொடுக்கப்பட்டது.

மூதாட்டி காணாமல்போன நிலையில், மூதாட்டியின் சடலம், 2 மாதங்களின் பின்னர், அவரின் வீட்டின் பின்புறத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

எதிரியின்மனைவி பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து, அப்போதைய யாழ்ப்பாண நீதவான் ஆர்.வசந்தசேனன் முன்னிலையில் யாழ்ப்பாண பொலிஸாரால் புதைகுழியில் இருந்து சடலம் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சட்ட வைத்திய அதிகாரி கே. ரத்தினசிங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில், கழுத்து நெரிக்கப்பட்டதனால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் மற்றும் மொட்டையான ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டதனால் மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவு என்பன காரணமாக மரணம் உடனடியாகவே நிகழ்ந்ததாக கண்டறியப்பட்டது.

இறந்தவர் காணாமல் போயிருந்த காலப்பகுதியில் அவர் வாழ்ந்த அதே வீட்டில் தனது மனைவி, பிள்ளையுடன் வாழ்ந்து வந்த எதிரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து, இரண்டு நகைக்கடைகளில் இருந்து உருக்கப்பட்ட நிலையில் சில நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நடாத்தப்பட்ட வழக்கு விசாரணையில் அரச தரப்பில் முன்வைக்கப்பட்ட சாட்சியத்தை தொடர்ந்து, எதிரியும் சாட்சியம் அளித்தார்.

இறந்தவர் காணாமல்போவதற்கு முன்னரே தனது மனைவியுடன் ஏற்பட்ட மனஸ்தாபத்தினால் இறந்தவர் வசித்த வீட்டிலிருந்து தான் தனியே வெளியேறிச் சென்றுவிட்டதாகவும், தொடர்ந்து பொய்யான தகவல் ஒன்றின் அடிப்படையில் இராணுவ புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு மூன்று வாரங்கள் தடுத்துவைக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இறந்தவரின் வீட்டிற்கு தனது மனைவி மற்றும் பிள்ளையை தேடி தான் சென்ற போது, அங்கு யாரும் இருக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். இறந்தவரின் கொலைக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வழக்கில் தான் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போது தனது மனைவி இறந்துவிட்டார் என்று அறிந்து கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வழக்கு விசாரணையின் முடிவில் தீர்ப்பு வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால், திருப்திகரமான முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, குற்றத்தீர்ப்பு வழங்கி எதிரிக்கு மரணதண்டனை விதித்திருந்தார்.

2017ம் ஆண்டு ஆனி மாதம் 27ம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பையும் மரணதண்டனையையும் ஆட்சேபித்து எதிரியினால் மேன்முறையீடு செய்யப்பட்டது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெற்ற மேன்முறையீட்டு விசாரணையில், கொலைக்குற்றச்சாட்டுக்கு எதிரியை குற்றவாளிஎன தீர்ப்பளிப்பதற்கு போதுமான சாட்சியம் இல்லை என அவரின் சார்பில் வாதிடப்பட்டது.

இருதரப்பு வாதங்களும் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

நீதியரசர்கள் மேனகா விஜயசுந்தர, சசி மகேந்திரன் ஆகியோர் தமது தீர்ப்பில், குற்றச்சாட்டு நியாயமான அளவு சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை என தெரிவித்து எதிரியை விடுதலை செய்ய உத்தரவிட்டனர்.

மேன்முறையீட்டு விசாரணையில் எதிரியின் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி எஸ். பஞ்சாட்சரத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். பிரதிவாதியான சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி சமிந்த விக்கிரமரத்ன வாதாடினார்.(ம-7.33)

## இலங்கை...

துள்ளனர். இந்தச் சட்டத்தின் நடைமுறை இலங்கையை பிளவுபடுத்தும் நடவடிக்கை எனவும் இதனடிப்படையில் குறித்த சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, இலங்கையை இரண்டாக பிரிக்கும் 13 ஆவது திருத்தச் சட்டம் எந்தக் காரணத்துக்காகவும் நடைமுறைப்படுத்தப்படக் கூடாதென இதுராகாரே தம்மரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு அனைவரும்தமது எதிர்ப்புக்களை வெளியிட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.(ம-7)

வேலைவாய்ப்பு
● வெப்மெசின் இயக்குநர் (அனுபவமுள்ளவர்கள்)
● வெப்மெசின் பயிலுனர்கள் (ஆண்கள் இரவுக்கடமை)
குறிப்பு :
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு
076 097 3121

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
நிலப்பரப்பு
- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேதாக்கன்னி கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 14 இலட்சமும் 18 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை
தொடர்புகளுக்கு :-
ஜெயம்
077 814 7389
077 986 5457
(16681)

VILLAGE HOTEL JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=
(16349)
T.P:077 544 8503



காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் (K.K.S) 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
துறைமுகத்தில் இருந்து 1.2 Km தூரத்தில்
தொடர்பு (16665)
075 521 3533

விற்பனைக்கு
கந்தரோடையில் பிரதான வீதியில் உள்ள சகல வசதியும் கொண்ட கல்வீடு வளவு விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
(16688)
075 717 3924

Happy Supermarket - உரும்பிராய்
உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg சீனி | - 235/= (max 2kg) | |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg கோதுமை மா | - 189/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 199/= | |
| 1 Kg அரிசி மா | - 169/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 148/= | |
| 1 Kg மல்லி | - 410/= | |
| 10 Kg விஜிதா நாடு அரிசி | - 1820/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= | ~~(1080/=)~~ |
| அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/=)~~ |
| 1 Kg Sunlight rose powder | - 360/= | ~~(480/=)~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30
(16689)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ்-பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.